இராமலிங்க அபயம் துணை

<u>முன்னுரை</u>

திருவருட்பிரகாச வள்ளற் பெருமானார் ஸ்ரீமுக ஆண்டு கார்த்திகை மாதத்தில் (1873 நவம்பர்) உள்ளிருந்த விளக்கைத் திரு மாளிகைப் புறத்தில் வைத்து

“இதைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப்போகிறேன். இனி கொஞ்சகாலம் எல்லோரும் ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிற படியால், உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல் “நினைந்து நினைந்து” என்னும் தொடக்கமுடைய 28 பாசுரம் அடங்கிய பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்தில் செய்யுங்கள். நானிப்போது இந்த உடம்பில் இருக்கிறேன். இனி எல்லா உடம்புகளிலும் புகுந்து கொள்வேன்” என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

(ஊரனடிகள் பதிப்பு உரைநடை பக். 438) திருவருட்பிரகாச வள்ளற்பெருமானார் வெளியில் வைத்த அந்த விளக்கை அவர் வழிபட்டு வந்த விளக்கு என்று ஒரு சிலர் கூறுகின்றார்கள். மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் வள்ளலார் இருந்த அறையில் இரண்டு இரும்புப் பெட்டிகள் இருந்தன. அதல் ஒரு இரும்புப் பெட்டிக்குப் பிரதிதினமும் தோத்திரங்களோடு வலம் வந்து தீபாராதனை செய்வதுண்டு.

(ஊரன் அடிகள் வெளியிட்ட வடலூர் வரலாறு பக 136 & 143)

வள்ளற்பெருமானார் திருக்காப்பிட்டுக் கொண்ட பின்பும் அந்தப் பெட்டிகள் அங்கேயே இருந்தன. 6.12.1884 அன்று சபாபதி சிவாச்சாரியார் இந்த இரண்டு இரும்புப் பெட்டிகளுடன் சில பொருட்களையும் களவாடிக் கொண்டு வந்தார். (வடலூர் வரலாறு பக் 143) 3.6.1890 அன்று அந்த இரண்டு இரும்புப் பெட்டிகளையும் சிற்சபையிலும், பொற்சபையிலும் பிரதிஷ்டை செய்து வைத்தார். இதில் முக்கியக் குறிப்பு என்னவென்றால் இந்த இரும்புப் பெட்டிகள் ஞான சபையில் சிற்சபையிலும் பொற்சபையிலும் வள்ளற்பெருமானாரால் பிரதிஷ்டை செய்யப்படவில்லை என்பதும், ஸ்ரீமுக ஆண்டு கார்த்திகை மாதம் வெளியில் வைத்த தீபம் வள்ளலாரால் வழிபடப்பட்டதும் அல்ல என்பதும் ஆகும். திரு அருட்பா மொத்தம் 5818 பாக்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். நம் பெருமானார் அவற்றுள் 28 பாடல்களை மட்டும் (ஞான சரியை) குறிப்பிட்டு அதில் கண்டுள்ளபடி தெய்வ பாவனையைச் செய்யுங்கள் என்று கூறியுள்ளார். சன்மார்க்கச் சங்கத்தவரில் அனேகர் சித்தி வளாகத்திற்கு வந்து இந்த 28 பாக்களைப் படிக்கும் வழக்கம் கொண்டுள்ளனர். வள்ளற்பெருமானார் கூறியுள்ள வாசகத்தைச் சற்று கூர்ந்து கவனித்தால் ஓர் உண்மை புலப்படும். அதில் கண்டுள்ளபடித் தெய்வ பாவனையைச் செய்யுங்கள் என்றார். இதன் பொருள் அப்பாக்களில் என்ன செய்யுமாறு கூறப்பட்டுள்ளதோ அதைச் செய்ய வேண்டுமே தவிர வெறுமனே படிப்பதா? அதில் கூறியுள்ள தென்ன என்று தெரிந்து கொள்ளவே இந்த உரை இயன்ற அளவில் வெளி வருகின்றது.

முதற் பாடலிலேயே இறைவனை எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதும் சிற்சபை, பொற்சபை எதுவென்று அறிந்து அதில் புகுந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார். ஒவ்வொரு பாடலிலும் இறைவன் வருதருணம் வந்துவிட்டது. எல்லோரும் வாருங்கள். அவன் அருளால் மரணமிலாப் பெரு வாழ்வு பெறலாம் என்று கூறியுள்ளார். அவர் வாக்கை நாம் நம்பாமல் ஏமாந்து விடுவோமோ என்று மனமிரங்கி நான் கற்பனையாகச் சொல்லவில்லை, பொய் கூறவில்லை. சத்தியமாகச் சொல்கிறேன் என்றெல்லாம் திரும்பத் திரும்பக் கூறியுள்ளார். நம்மீது நம் பெருமானார் கொண்டுள்ள அளவற்ற அக்கறையும், பாசமும் நன்றாக விளங்கும். இந்த உரை சிறந்த உரை என்று கூறமுடியாது. தயவு செய்து என் மீது இரக்கம் காட்டி ஏற்றுக் கொள்ளுங்கள். வந்தனம் நன்றி.

மு. பாலு.

குறிப்பு: இந்தப் புத்தகம் திரு. B. பாபு அவர்கள் பொருளுதவி கொண்டு வெளிவருகின்றது. அவருக்கு எல்லா நலன்களையும் நம்பெருமானார் அருள்வாராக.

**நன்றி**

**மு. பாலு**

இராமலிங்க அபயம் துணை

## ஞான சரியை

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து
ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என் உரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே (1)

தமிழ் இலக்கணத்தின்படி ஒரு பாடலில் ஒரு வார்த்தை இருமுறை ஒரே பொருளில் வந்தால் அதனை அடுக்குத்தொடர் என்பர். நினைந்து நினைந்து என்ற அடுக்குத் தொடர் நினைந்து கொண்டே இருக்க வேண்டும் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது,

தொடர்ந்து நினைக்க வேண்டும் - அந்த நினைப்பின் பயனாக ஒன்றை உணரவேண்டும். அந்த உணர்வு இறைவன் மீது அன்பை நிறையச் செய்யவேண்டும். அதன் விளைவாகக் கண்ணீர் ஊற்றெடுத்துப் பெருகும். வாயோ இறைவனை வாழ்த்தும். பலன் மரணமிலாப் பெருவாழ்வாகக் கிட்டும்.

இது கற்பனையல்ல-பொய்யுமல்ல - சத்தியமே என்கிறார் வள்ளலார்.

எதை நினைத்தால் இந்த அனுபவம் கிட்டும். திரு அருட்பாவில் இதற்கான பதிலைத் தேடுவோம். நின் பேரருளை நினைக்கும் தோறும் உடம்பு பொடிக்குதே என்கிறார் வள்ளலார். பேரருள் என்பது என்ன?

நமது வாழ்கையில் இதுவரை நடந்த சம்பவங்களை நினைவு கூர்வோம். எவ்வளவோ சந்தர்ப்பங்களில், பல ஆபத்துக்களைக் கடந்திருப்போம் - முடியாது என்று எண்ணிய பல செயல்கள் நமக்குச் சாதகமாக முடிந்திருக்கும் - கவலைப்பட்டு, வேதனைப் பட்டதெல்லாம் நல்ல விதமாக மாறியிருக்கும் - எதிர்பாராத பல நன்மைகளை நாம் அடைந்திருப்போம். பல தரப்பட்ட பிணிகளிலிருந்து சுகமடைந்திருப்போம். இவையெல்லாம் ஆண்டவன் அருளால் நிகழ்ந்தவை.

அவற்றை ஆரம்ப முதல் எண்ணிப் பார்த்தோமானால் அன்று முதல் இன்றுவரை ஆண்டவன் நமக்குத் துணையாக இருக்கிறான் என்பதை உணர்வோம். இறைவன் நமக்குத் துணையாக இருக்கிறான் என்பதை உணர உணர பக்தி, ஒழுக்கம், தயவு, என்பனவற்றில் குறையே உள்ள நமக்கா அவன் துணையாக இருந்தான் என்று உணர்ந்தால் அவன் மீது அன்பு பெருகும்.

அன்பு என்ற வார்த்தைக்கு வள்ளலார் தரும் பொருள் வேறாக உள்ளதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். நாம் ஒருவர் மீது ஒருவர் காட்டும் தயவை அன்பு என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் வள்ளலார் தரும் பொருள் வேறு.

அன்பர் என்பது பொருள், புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதும் என்று



அதிற் பயில்வோரைக் குறித்தது என்கிறார். சிவானந்தத்தை அடையத் தவம் செய்வோரே அன்பர். ஒவ்வொரு கடிதத்திலும் எல்லா ஜீவர்களிடத்துத் தயவும், கடவுளிடத்து அன்பும் மாறாமல் இருக்க வேண்டும் என்று வள்ளலார் எழுதுகிறார். கடவுள் மீது வைக்கும் பக்தியே அன்பாகும்.

தகுதி ஏதும் இல்லாத நமக்கும் இறைவன் அருள் தருவதை உணர்ந்தால் மனம் நெகிழ்ந்து, அவன் மீது பக்தி பெருகுமல்லவா. இதைத்தான் அன்பே நிறைந்து நிறைந்து என்று பாடியுள்ளார். இறைவன் மீது பக்தி பெருகப் பெருக நமது வாய் அவனை வாழ்த்தும். கண்களில் நீர் ஆறாகப் பெருகும். நன்னிதியே, ஞான நடத்தரசே என் உரிமை நாயகனே என்று போற்றும். இதுவே ஞானசரியை. நமது இச்செய்கையால் நமக்கு மரணமிலாப் பெருவாழ்வு கிட்டும்.

மரணமிலாப் பெருவாழ்வா? நாம் நம்ப மாட்டோம் என்பதை வள்ளற்பெருமானார் நன்கு அறிந்தவர். அவரது கருணை உள்ளம் இந்த மக்கள் நம்பாமல் போனால் போகட்டும் என்று விட்டுவிடத்துணியவில்லை. இந்த மக்களை நம்பும்படிச் செய்யவேண்டும். மரணமிலாப் பெருவாழ்வை அடையும்படிச் செய்ய வேண்டும் என்று அவர் மனம் இரங்குகிறது. எனவே நம்மைப் பார்த்து விளக்கம் தருகிறார். மக்களே நான் கற்பனையாகச் சொல்லவில்லை. பொய்யும் நான் பேசமாட்டேன். நான் சத்தியமே சொல்கிறேன் என்று கூறுகின்றார்.

இறுதியாக ஒரு வார்த்தை இந்தப் பக்தியோடு நின்றுவிடாதீர்கள். நீங்கள் செய்ய வேண்டியது இன்னமும் ஒன்று உண்டு. அதாவது பொற்சபை, சிற்சபை எவை என்று அறிந்து அதில் புகுந்து கொள்ளுங்கள். நமக்கு இன்னும் நிறைய வயது இருக்கின்றது. இதற்குள் என்ன அவசரம்? வயதான பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்துவிடாதீர்கள். இதுவே தருணம். இதுவே சரியான நேரம்

தாமதம் செய்யவேண்டாம் என்று உறுதியாக எடுத்து இயம்புகின்றார்.

நம் உடம்பில் சிற்சபை எது? பொற்சபை எது? என்று ஒரு குருவை நாடி, அறிந்து கொள்ளவேண்டும். அவர் வழிகாட்ட நாம் பொற்சபையில், சிற்சபையில் புகுந்து கொண்டால் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறலாம்.

**புகுந்தருணம் இது கண்டீர் நம்மவரே நான்தான்**
**புகல்கின்றேன் என்மொழி ஓர்பொய்மொழி என்னாதீர்**
**உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்**
**உடைமைகளும் உலகியலும் உற்ற துணைஅன்றே**
**மிகுந்த சுவைக் கரும்பே செங்கனியே கோற்றேனே**
**மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே**
**தகுந்த தனிப் பெரும் பதியே தயாநிதியே கதியே**
**சத்தியமே என்றுரைமின் பக்தியொடு பணிந்தே (2)**

முந்தைய பாடலில் பொற்சபை எது. சிற்சபை எது என்று அறிந்து அவற்றிலே புகுந்து கொண்டால் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் என்று மரணத்தை வெல்லக் கூடிய வழியை நம் வள்ளற் பெருமானார் காட்டினார்.

மனிதர்கள் சத்துவ குணம், ரஜோகுணம், தாமச குணம் ஆகியவற்றில் சிக்குண்டு வாழ்ந்து வருகின்றனர். சத்துவ குணமுடையவர்கள் நல்லவர்கள். ரஜோகுணம் உடையவர்கள் பொல்லாதவர்கள். தாமச குணமுடையவர்கள் எதையும் குறித்த காலத்தில்



செய்யாமல் பிறகு பார்த்துக்கொள்ளலாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப் போட்டுக் கொண்டே வந்து முடிவில் எந்தக் காரியத்தையும் காலத்தில் சாதிக்க மாட்டார்கள்.

நம்முடைய பிள்ளைகளில் ஒரு பிள்ளை சற்று வித்தியாசமாகக் கோயிலுக்குச் சென்றாலோ ஆன்மிகத்தில் சற்று அதிகமான அக்கரை காட்டினாலோ நாமே அந்தப் பையனைப் பார்த்து இதற்கெல்லாம் வயது இருக்கிறது. இப்போது அவசியமில்லை-பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று தடுப்பதுண்டு.

மகிஷம் என்றால் எருமை. அதாவது தாமச குணம். அசுரன் என்பது தீயகுணம். மகிஷாசுரன் என்றால் தாமசமாகிய தீயகுணம். இந்தத் தாமச குணத்தை அழிப்பதே ஆயுதப்பூஜைப் பண்டிகையின் விளக்கம். யார் இதை உணர்ந்து தாமச குணத்தை ஒழித்தார்கள்?

இதை உணர்ந்த நம் வள்ளற் பெருமானார் பொற்சபை சிற்சபை புகுவதையும் தள்ளிப் போடாதீர் தாமசம் வேண்டாம். அது ஆபத்து என்று சுட்டிக் காட்டவே இந்தப் பாடலின் ஆரம்பத்திலேயே புகுந்தருணம் இது கண்டீர் நம்மவரே என்று ஆரம்பிக்கிறார்

பொற்சபை சிற்சபையை அறிந்து அதில் இப்பொழுதே புகுந்து கொள்ளுங்கள் என் வார்த்தையைப் பொய் என்று கூறிவிடாதீர்கள்.

உடம்பை விட்டு உயிர் பிரியும்போது மனைவி, மக்களோ நம்மைப் பெற்ற தாய் தந்தையரோ, அல்லது மற்றவர்களோ நாம் சம்பாதித்து வைத்துள்ள சொத்துக்களோ நிலபுலன்களோ, பணமோ, உலகியலில் நாம் பெற்றுள்ள அந்தஸ்தோ எதுவும் உயிருக்குத் துணையாக வராது. இது அனைவரும் நன்கு அறிந்ததே. இதை நன்கு உணர்ந்து

இறைவனை வாழ்த்துங்கள். அவனை எவ்வாறெல்லாம் வாழ்த்தலாம் என்று சில உதாரணங்கள் தருகின்றார். இறைவனோ செங்கனியாக, தேனிலே மிகமிக உயர்ந்த கோல் தேனாக, நாம் அடையக்கூடிய உண்மைப் பயனாக, நம் கையிலேயே உள்ள கைப்பொருளாக, விலை கூறமுடியாத, மணியாக இவ்வாறெல்லாம் பலவாக வாழ்த்துங்கள். வாயார வாழ்த்து கின்றோர் மனத்தமர்ந்த தெய்வம் அவன். அவனைப் பாடப்பாட வாய் மணக்கும். வஞ்ச வினைகள் அனைத்தும் ஓடிவிடும். அவன் ஒருவன் தான் எதனுடனும் ஒப்பிட முடியாத ஒப்பற்ற தனித் தலைவன். அவனுடைய கருணையே தனிப்பெருங்கருணை. நமக்கு அவனே கதி. இதுவே சத்தியம் என்றெல்லாம் பக்தியோடு அவனைப் பணியுங்கள் என்கிறார். சிற்சபையில் புகுந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். இது மனப்பக்குவம் சம்பந்தமுடையது வெறும் உடற்பயிற்சி அல்ல. இதற்குப் பக்தியால் முதலில் மனதைப் பக்குவமாக்குங்கள் என்று இந்தப் பாடலில் வழிகாட்டுகிறார்.

**பணிந்து பணிந்து அணிந்து அணிந்து பாடுமினோ உலகீர்**

**பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே**

**துணிந்து வந்து வேதாந்த சுத்த அனுபவமே**

**துரிய முடி அனுபவமே சுத்த சித்தாந்த மதாய்த்**

**தணிந்த நிலைப் பெருஞ்சுகமே சமரச சன்மார்க்க சத்தியமே**

**இயற்கை உண்மைத்தனிப்பதியே என்று**

**கணிந்துளத்தே கனிந்து நினைந்து உரைத்திடில் அப்பொழுதே**

**காணாத காட்சியெலாம் கண்டு கொளலாமே (3)**



பணிந்து என்ற வார்த்தை இருமுறை வந்துள்ளதால் ஆண்டவனைப் பணிந்து வணங்குவது தொடர்ந்து செய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. பணிதலே தொழில், எப்படிப் பணிவது? அவனைப் புகழ்ந்து புகழ்ந்து பாட வேண்டும். அதை வற்புறுத்தவே அணிந்து என்ற சொல் அடுக்குத் தொடராக இருமுறை வந்துள்ளது. பணிந்தறியேன் அன்புடனே பாடுதலும் அறியேன் என்று ஒரு பாடலில் கூறியுள்ளார்.

இறைவனுக்கு நம்மால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. அவனுடைய அருளால் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இறைவனைப் பாடப்பாட வாய் மணக்கும் என்பதுடன் வஞ்ச வினைகளும் நம்மைவிட்டு விலகிப் போய்விடுமாம். வாயார வாழ்த்துகின்றோர். மனத்தமர்ந்த தெய்வம் என்று வள்ளற்பெருமானார் பாடியுள்ளார். எனவே இறைவனைப் பணிவோம் வாழ்த்துவோம். மேலான பொருள் என்று ஒன்று இருந்தால் அதைவிட மேலானவன் அவன். அவனுக்கு மேல் வேறு பொருள் இல்லை. பஞ்ச பூதத்தலங்களில் ஆகாயத்தலமாகிய சிதம்பரத்தே நடனம் புரிபவனாக இருக்கிறான்.

(குறிப்பு: ஊரின் பெயர் தில்லைவனம், ஆலயத்தின் பெயர்தான் சிதம்பரம். ஆலயத்தின் பெயரே ஊரின் பெயராக அமைந்துள்ளது)

சிதம்பரத்தே திருச்சிற்றம்பலத்தே விளங்கும் ஆடல் அரசனாக விளங்குபவனே தன் அசைவினால் அகிலத்தையே ஆட்டிக்கொண்டிருப்பவனே.

எல்லா சாஸ்திரங்களும், கூறும் அனுபவமாகவும், அவற்றில் விளக்கியுள்ளதை விளங்கிக் கொண்டு பயில்வோர்க்கு உண்மை அனுபவமாகவும் உள்ளவனே, எங்கே மெய்யன்பர் உள்ளனரோ அங்கே, அவர்கட்கு நலந்தர

எழுந்தருளி யார் எதை எவ்வாறு வேண்டுகின்றனரோ அவ்வாறே அன்றே இரங்கி வரமாக அளிப்பவனே.

அசையும் பொருள் அசையாப்பொருள் அனைத்திலும் இறைவன் கலந்திருக்கிறான். மண்ணினில் மண்ணாக, நீரினில் நீராக, நெருப்பினில் நெருப்பாக, காற்றினுள் காற்றாக, விண்ணினுள் விண்ணாக இருப்பதால் அவனில்லாத ஒன்று எதுவும் இல்லை என்கிறது வேதாந்தம். ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் அவன் இருக்கிறான். ஏன் நம் முள்ளும் அவன் இருக்கிறான். ஆனால் நாம் அதனை அறியவில்லை. அனுபவிக்கவில்லை. அவன் வள்ளல் பெருமானார்க்கு அனுபவமானான். அதைத் தான் எழுதிய அகவலில் விளக்கியுள்ளார். தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர் அனுபவம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி என்று. தன்னை ஒரு கொடியவனாகத் தாழ்த்திக்கொண்டு இறைவன் தன்னிடம் துணிந்து தைரியமாக வந்ததாகக் துணிந்து வந்த வேதாந்த சுத்த அனுபவமே என்றார். பணிந்தறியேன் என்று தொடங்கும் அருட்பாவில் துணிந்து எனக்கும் கருணை செய்த துரையே என்றும் நம் பெருமானார் பாடியுள்ளதைக் கவனிக்கலாம்.

இறைவனைப் புறத்தில் எந்த வடிவில் வணங்கினாலும் தவத்தின் முடிவில் ஒளியாகவே இறைவனது காட்சி கிட்டும். எந்த அனுபவத்தில் அந்த ஒளி காணும்? துரிய மலை மேல் உளதோர் ஜோதி வளநாடு, தோன்றும். அதில் ஐயர் நடம் செய்யும் மணிவீடு என்று வள்ளலார் பாடியுள்ளார். துரிய மலை மேல் என்றது துரியாதீதம் அதனையே இங்கு துரிய முடி அனுபவமே என்றார்.

சித்தாந்தம் பேசுகின்ற ஜீவன், ஜீவன்தான், சிவம் சிவம்தான் என்ற துவைத நிலையில் இருந்து அந்த வாதம் இன்றி குணங்களாலும் தவத்தாலும் தணிந்து அத்வைத நிலை பெறுவதால் தணிந்த நிலைப் பெருஞ்சுகமே என்றார்.



எல்லாச் சமயங்கட்கும், எல்லா மதங்கட்கும், மற்ற எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு பொதுவாய் விளங்கும் சமரச சன்மார்க்கத்தின் சத்தியப் பொருளே. கற்பனைக் குட்படாத இயற்கை உண்மை வடிவினனே என்றெல்லாம் அவனை உணர்ந்து உள்ளத்திலே கனிவுகொண்டு ஜீவகாருண்யத்தையே கைக்கொண்டு மனநெகிழ்ச்சியுடனும், மன உருக்கத்துடனும் அவனை நினைந்து வாழ்த் துங்கள். எந்த க்ஷணத்தில் மனம் அடங்கி உள்ளமானது செயல்படுகின்றதோ அப்போதே காணாத காட்சியெலாம் கண்டு கொள்ளலாம். (தவம் செய்தால் மட்டுமே காட்சி காணலாம்)

**கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே**
**கற்றதெலாம் பொய்யே நீர் களித்ததெலாம் வீணே**
**உண்டதெலாம் மலமே உட்கொண்டதெலாம் குறையே**
**உலகியலீர் இதுவரையும் உண்மை அறிந்திலிரே**
**விண்டதனால் என் இனி நீர் சமரச சன்மார்க்க**
**மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள் நன்குணர்ந்தே**
**எண்டகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின்**
**இறவாத வரம்பெறலாம் இன்பமுறலாமே** (4)

நாம் இதுவரையும் எண்ணியே பாராத பல உண்மைகளை நம் பெருமானார் இந்தப் பாடலில் எடுத்துக்காட்டுகிறார். நாம் நம்மைச் சுற்றி என்னென்ன காண்கிறோம். பெரிய பெரிய மரங்கள். பலவிதமான பறவைகள், எண்ணற்ற மிருகங்கள், கோடிக்கணக்கான

மனிதர்கள், வானைமுட்டும் கட்டிடங்கள், எவ்வளவோ வாகனங்கள், இவற்றுடன் வானத் திலே தாரகைகள், சந்திரன், சூரியன், இன்னும் பலப்பல கோளங்கள். உண்மைதான் நாம் காண்பது உண்மைதான் அதனா லென்ன? இவைகைள் எல்லாம் என்றாவது ஒருநாள் அழிந்துபோய் இல்லாமல் போய் விடும் என்று எண்ணிப் பார்த்திருக்கிறோமா? இல்லவே இல்லை. எல்லாம் சாசுவதம் என்று எண்ணிக்கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உண்மை நிலை என்ன? நாம் கண்ணால் காணும் எந்தப் பொருளும் என்றாவது ஒருநாள் அழிந்து,, இல்லாமல் போய்விடும் என்பதே உண்மை. இதைத்தான் நம்பெருமானார் நாம் கண்டதெல்லாம் அநித்தியமே என்று எடுத்துக் காட்டுகிறார். இந்த உண்மையை ஏன் உணர வேண்டும்? அந்த உண்மையை உணர்ந்தால் அவற்றின்மீது நாம் கொண்ட ஆசை, பற்று நீங்கும்.

நல்லவர்கள் மேடை ஏறிப்பேசுகின்றார்கள். அறிஞர்கள் பேசுகின்றார்கள். ஞானிகள் பேசுகின்றார்கள். நன்கு படித்த மேதைகள் பேசுகின்றார்கள். அவர்கள் பேச்சையெல்லாம் கேட்கிறோம். பாராட்டுகிறோம். மெச்சுகிறோம். வாழ்த்துகிறோம் இதனால் என்ன பலன்? அவர்கள் பேசிய நல்ல வார்த்தைகளை, அறிவுரைகளை, நல்ல நல்ல கருத்துக்களை நாம் மனதிலே உண்மையாக ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்க முயற்சி செய்கின்றோமா? இல்லவே இல்லை. அவ்வாறு ஒரு முயற்சி செய்திருந்தால் நாம் அனைவரும் மிக மிக நல்லவர்களாக அல்லவா உருவாகியிருப்போம். முயற்சி செய்யாத நாம் கேட்டதெல்லாம் என்ன ஆயிற்று? நாம் கேட்டதெல்லாம் பழுதே என்கிறார் பெருமானார். நாம் பள்ளியிலே சேர்ந்து கல்வி கற்கின்றோம். பள்ளிக் கல்விக்குப்பின் கல்லூரிப் படிப்பு போன்று எவ்வளவோ மேல் படிப்புகள். நாம் படிக்கின்ற



படிப்பெல்லாம் பொருளை ஈட்டுவதற்கு மட்டுமே பயன்படுகின்றது. நமது வாழ்க்கைக்கு எந்த அளவில் நாம் படித்த படிப்பு பயன்படுகிறது? சற்று சிந்தித்துப்பார்ப்போம். உதாரணமாகச் சிறுவயதிலேயே ஆறுவது சினம் என்று படித்திருக்கிறோம். ஆனால் நமக்கு வரும் சினத்தைத் தணிய வைக்க என்றாவது முயற்சி செய்து இருக்கிறோமா?

தன்னைத்தான் காக்கில் சினம் காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம் என்ற திருக்குறளையும் படித்திருக்கிறோம். யாராவது கோவத்தை எப்போதாவது ஒழித்திருக்கிறோமோ? இல்லவே இல்லை. நாம் கற்றதில் ஒன்றையும் கடைப்பிடிக்காத போது நாம் கற்றதனால் என்ன பலன்? நாம் கற்றதெல்லாம் பொய்யே என்கிறார் பெருமானார். நாம் பொய்யாகவே படித்திருக்கிறோம் என்பதே உண்மை. நம் வாழ்க்கையிலேயே எவ்வளவோ இன்பங்களை அனுபவித்த மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம். அந்த மகிழ்ச்சியெல்லாம் நிலையானதாக இல்லாமல் அவைகளும் வீணாகிவிட்டன.

வாய்க்கு ருசியாக எவ்வளவோ வகை உணவுகள் தின்பண்டங்கள் முதலியன வகை வகையாக உண்டு மகிழ்கிறோம். அவை அத்தனையும் மலம்தான் என்று உணர்ந்தால் உணவின் மீது பற்று சற்று குறையுமே! நாம் பொருள் சம்பாதிக்கிறோம். சேர்த்தும் வைக்கிறோம். ஆனால் போதும் என்று என்றாவது எண்ணிக் பார்த்திருக்கிறோமா? வீடு கட்டடினோம்? நகைகள், ஆபரணங்கள், அளவிற்கு மீறியே வாங்கியிருக்கிறோம். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையில் நமக்கு மன நிறைவு ஏற்பட்டதா? இன்னும் தேவை தேவை என்று ஓடிக்கொண்டிருக்கிறோமே தவிர மனநிறைவு அடைந்ததில்லையே. நாம் உள்ளே அதாவது மனதிலே கொண்டதெல்லாம் குறையே என்று நம் பெருமானார் சுட்டிக் காட்டுகின்றார். இதுவரை நம் பெருமானார் கூறியது என்ன?

நாம் கண்டதெல்லாம் அநித்தியமே (அழியும் பொருட்களே)

நாம் கேட்டதெல்லாம் பழுதே (பின்பற்றாததால்)

நாம் கற்றதெல்லாம் பொய்யே (வாழ்க்கையில் கொள்ளாததால்)

நாம் களித்ததெல்லாம் வீணே
(ஏனெனில் அவை நிலையாக இல்லாததால்)

நாம் உண்டதெல்லாம் மலமே
வாய்க்கு ருசிதான் ஆனால் உண்மை என்ன)

நாம் உன்ளே கொண்டதெலாம் குறையே
(யாரும் மனநிறைவான வாழ்க்கை வாழாததனால்)

இவற்றை மீண்டும் மீண்டும் சொல்வதால் என்ன பயன்? மக்களே நன்கு சிந்தித்து உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்.

இதுவரை வாழ்ந்ததுபோல் இனியும் இராதீர்கள். இனிமேலாவது நீர் சமரச சன்மார்க்க மெய்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள் நன்குணர்ந்து எண்டகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின் என்கிறார். நாம் செய்யவேண்டியது என்ன? வள்ளற்பெருமானார் அருளியுள்ள சன்மார்க்க நெறியை அறிந்து அதனை ஏற்று வாழ்க்கையில் பின்பற்றுங்கள். இறைவன் ஒருவனே என்பது சன்மார்க்கம். அந்த ஒருவனின் அருளைப் பிற உயிர்களின் மீது காட்டும் தயவினால் மட்டுமே பெற முடியும் என்பது சன்மார்க்கம். இறைவன் மீது காட்டும் பக்தி ஒன்றுதான் நாம் முன் செய்த வினைகளைப் போக்கி நம்மை வாழ்விக்கும். ஜீவகாருண்யம் ஒன்றினால் அவன் அருளை முழுமையாகப் பெறமுடியும் என்பது சன்மார்க்கம்.



மனிதன் ஒழுங்காக வாழ வேண்டும் என்பதில் வள்ளலார் உறுதியாக இருந்தார். மனிதர்கள் பின்பற்ற இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம், என்ற நான்கு ஒழுக்கங்களை வரையறுத்தார். இந்த ஒழுக்கங்களை நாம் அனைவரும் உண்மையான விருப்ப முயற்சியாக ஏற்றுக்கொண்டு கடைப்பிடிப்பதே சன்மார்க்க நெறி. இதனால் நாம் அடையப்போகும் பலன்களை ஏமசித்தி, சாகாக்கல்வி, தத்துவ நிக்கிரகம் செய்தல், கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என்கிறார். முடிந்த முடிவாக இறைவனை நம்முள்ளே அதாவது புருவமத்தியிலே திருச்சிற்றம் பலத்தே காணவேண்டும். அதற்குரிய தவம் நாம் அவசியம் செய்தே ஆகவேண்டும். திருச் சிற்றம்பலத்திலே இறைவனின் அருளை நாம் அடைந்தால் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறலாம். இறவாத வரம் பெறலாம். அழியாத இன்பம் அடையலாம் என்று வழி காட்டுகின்றார். உண்மைகளை உணர்ந்துகொள்வோம். சன்மார்க்க நெறியில் வாழ்ந்து இறைவன் அருளால் இறவாத வரம் பெறலாம். வம்மின்

**இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திட வாழ்ந்திடலாம்**
**எல்லாம் செய்வல்ல சித்தி இறைமையும் பெற்றிடலாம்**
**அன்புடையீர் வம்மின் இங்கே சமரச சன்மார்க்கம்**
**அடைந்திடுமின் அகவடிவு இங்கு அனக வடிவாகிப்**
**பொன்புடை நன்கொளிர் ஒளியே புத்தமுதே ஞான**
**பூரணமே ஆரணத்தின் பொருள் முடிமேல் பொருளே**

வன்புடையார் பெறற் கரிதாம் மணியே
சிற்சபையின்
மாமருந்தே என்றுரைமின் தீமையெலாம் தவிர்ந்தே
(5)

முந்தைய பாடலில் சமரச கன்மார்க்க மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப் பொருளை நன்குணர்ந்து சிற்றம்பலத்தே எந்தை அருளை அடைமின் இறவாதவரம் பெறலாம். இன்பமுறலாமே என்று அழைத்தார். அதனைத் தொடர்ந்து நாம் இன்பம் அடையலாம். என்ன இன்பம்? இறவாத வரம் பெற்று என்றும் வாழ்கின்ற வாழ்வாகிய இன்பத்தை அடையலாம்.

இதுவரை யாரும் பெறாத இறவாமையை வள்ளற்பெருமானார் பெற்றதனால் எல்லா உலகமும் அவரைப்போற்றுகின்றன. நாமும் அவரைப்போல இறவா நிலை பெற்று எவ்வுலகும் வாழ்த்தும்படி வாழ்ந்திடலாம். அத்துடன் மட்டும் நில்லாது இறைவனால் என்னென்ன சித்திகள் செய்ய இயலுமோ அத்தனை சித்துக்களையும் பெற்றிடலாம். ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டிய பேறுகள் 1. ஏமசித்தி, 2. சாகாக்கல்வி. 3. தத்துவ நிக்கிரகம் செய்தல். 4. கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் என்பது வள்ளற்பெருமானார் வாக்கு. முதுடிவானபேறு கடவுள் நிலை அறிந்து அம்மயமாதலே. அதாவது கடவுள் வேறு நாம் வேறு என்று இல்லாது நாமே கடவுளாதல். இந்தப் பெரும் பேற்றையே வள்ளற்பெருமானார் பெற்று தானே கடவுளாக விளங்கிக் கொண்டுள்ளார். அவர் பெற்ற அந்த இறைமைத் தன்மையை நாம் ஒவ்வொருவரும் பெறலாம் என்று இந்தப் பாடலில் அறிவுறுத்துகின்றார்.

பசு என்பது ஐந்து மலம் உள்ளது. ஜீவன் என்பது மூன்று மலம் உள்ளது.



ஆன்மா என்பது ஒரு மலம் உடையது. சிவம் என்பது மலம் அற்றது.

நம்மிடம் உள்ள ஐந்து மலங்களை நம்முடைய அதி தீவிர விருப்பமுயற்சியால் ஒவ்வொன்றாகக் குறைத்துக்கொண்டே வந்தால் முடிவாக நாமும் மலம் அற்றவராக விளங்கமுடியும். இந்த நிலையைத்தான் ஜீவனே சிவமாகும் என்று முன்னோர் கூறியுள்ளனர். வள்ளற்பெருமானாரும் மலம் கழிந்து உலகவர் வானவர் ஆயினர் என்று பாடியுள்ளார். இதிலிருந்து என்ன புரிகிறது? வானவர் என்பவர் வேறு யாருமல்ல. இந்த உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்களில் யார் யார் மாயாமலத்தை வெல்லுகின்றார்களோ அவர்களே வானவராம். தயவின் மிகுதியை விளக்கிக்காட்டவே தேவர்கட்கு நான்கு கைகள் இருப்பதாக எழுதியுள்ளார்கள் என்று வள்ளற்பெருமானார் விளக்கியுள்ளார்.

இறைவன் மீது அன்பு கொண்டவர்களே இங்கே வாருங்கள். சமரச சன்மார்க்கத்தை அடைந்திடுங்கள். சன்மார்க்கமானது ஜீவ காருண்யத்தை அடிப்படையாகக் கொண்டது. அதாவது உயிர் இரக்கம். வள்ளற்பெருமானார் மக்கள் மீது கொண்ட அக்கரையை, இரக்கத்தை அவர்கள் அனைவரும் இன்பமாக வாழவேண்டும், இறவாமல் வாழவேண்டும், என்ற கருணையை, என்றும் எப்போதும் மறந்ததில்லை. ஆனால் அவர் தனக்கென்று எதையும் விரும்பியதே இல்லை. அகப்பற்றை அறுத்துவிட்டார். அதனால் இறப்பற்ற நிலை பெற்றார். அனகம் என்பது பரந்த நிலை. எங்கும் வியாபகம் என்ற பொருள் உடையது. வள்ளலார் உள்ளம் தனக்கென்று இல்லாமல், எல்லா மக்களையும் எல்லா உயிர்களையும் நேசிக்கும், அனகமாக விளங்கியது. அதுதான் சன்மார்க்க நிலை. இதைத்தான் நம்பெருமானார் சன்மார்க்கத்திற்கு வாருங்கள். தனக்கென்று

சுயநலமாக வாழும் உள்ளம் அவ்வாறு உள்ள நிலை மாறிப் பரந்த உள்ளமாக, எல்லா உயிர்களையும் தன் உயிர்போல் பார்க்கும் அனகமாக மாறும். சன்மார்க்க நெறி நின்று இறைவனை வாழ்த்துங்கள். அவன் என்றும் குறையாது நன்மையே பயக்கும், நல்ல ஒளியாக விளங்குகின்றான். இறைவனைப் புறத்திலே எந்த வடிவில், என்ன பெயர் வைத்து வணங்கினாலும், அகத்திலே இறைக்காட்சி ஒளியாகத்தான் தோன்றும். அதனால்தான் இறைவனை ஒளி வடிவன் என்று அனைவரும் போற்றுகின்றனர்.

அமுதம் என்பது மரணத்தை நீக்கி வாழ்விப்பது. ஒக்க அமுதம் உண்டோம். இனிச் சற்றும் விக்கல் வராது கண்டாய் என்கிறது திருவருட்பா. இறைவனோ அனைவரையும் வாழ வைக்கும் அமுதமானவன். அவன் என்றும் புதியவன். அதனால், அவனைப் புத்தமுதே என வாழ்த்துகிறார்.

அருட்பெருஞ்ஜோதி என் அம்மையினோடு அறிவு ஆனந்தமாம் என்பார் வள்ளற்பெருமானார். இறைவன்தான் பூரண ஞானி. அதனை உணர்ந்து அவனை ஞான பூரணமே என்று வாழ்த்துகிறார்.

வேதங்கள் இறைவனைப் பற்றி எவ்வளவோ எடுத்துக்கூறுகின்றன. அவைகள் கூறும் பொருள்முடிவு எதுவோ, அதற்கு மேற்பட்ட பொருளாக இறைவன் விளங்குகின்றான். வேதங்களாலும் காணமுடியாத அளவிடமுடியாத மேலான பரம்பொருள் இறைவனே.

அந்த இறைவனை யாரால் அடைய முடியும்? இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம், ஜீவ காருண்ய ஒழுக்கம் முதலிய அரிய ஒழுக்கங்கள் அனைத்தும் நிரம்பப் பெற்று, இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பாடிப்பணிதல் போன்ற எல்லாம் பூரணமாக



விளங்கப்பெற்று, தவத்தையும் மேற்கொண்டோர் பெறக்கூடியவன் இறைவன், தீயஎண்ணம், தீயசொல், தீயச்செயல் உடைய வன்மனத்தார் பெறமுடியாத அரியவன் இறைவன்.

அவன் சிற்சபையில் மாமருந்தாக உறைகின்றான். தீமையெலாம் தவிர்ந்தவர்க்கு அவன் அனுபவப் பொருள். எனவே முதலில் நாம் தீமைகளைத் தவிர்ப்போம். இறை அருள் பெறுவோம். இன்பமாக வாழ்வோம்.

தீமை எலாம் நன்மை என்றே திருவுளம் கொண்டருளிச்
சிறியேனுக்கு அருளமுதத் தெளிவளித்த திறத்தை
ஆமயந் தீர்த்து இயற்கை இன்ப அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதியை ஓர்
ஓமயவான் வடிவுடையார் உள்ளகத்தே நிறைந்த
ஒரு பொருளை பெருங்கருணை உடைய பெரும் பதியை
நாமருவி இறவாத நலம் பெறலாம் உலகீர்
நல்ல ஒரு தருணமிது வல்லை வம்மின் நீரே (6)

குற்றம் புரிதல் மனித இயல்பு. அக் குற்றங்களை எல்லாம் குணமாகக் கொள்ளுவது இறைவனின் இயல்பு. அதனால்தான் குற்றம் புரிதல் எனக்கியல்பே குணமாகக் கொள்ளுதல் உனக்கியல்பே என்று பாடியுள்ளார்.

ஆணவம், மாயை, கன்மம், மாமாயை, திரோதை ஆகிய ஐந்து மலங்களும் உடையவர்கள் நாமாகிய ஜீவர்கள்.

**பசு என்பது ஐந்து மலங்கள் உடையது**

**ஜீவன் என்பது மூன்று மலங்கள் உடையது**

**ஆன்மா என்பது ஒரு மலம் உடையது**

**சிவம் என்பது மலம் அற்றது.**

(திரு அருட்பா உரைநடையில் காணப்படும் விளக்கம் இது)

தெய்வ மணி மாலையில் பதி பூசை முதலிய நற்கிரியையால் மனம் எனும் பசுகரணம் அசுத்தம் நீங்கிச் சுத்தமுறும் என்று பாடியுள்ளார். பசுத்தன்மையாகிய ஐந்து மலங்களை நீக்கி இயற்கை இன்ப அனுபவம் அடைய வேண்டும். நாம் அனுபவிக்கும் உலகியல் இன்பங்கள் எல்லாம் செயற்கை இன்பங்களே. இந்த இன்பங்கள் நெடு நாளைக்கு நிலைக்காது. இயற்கை என்பது என்றும் மாறாத தன்மை உடையது. என்றும் மாறாது நிலைத்து நிற்கும் ஆன்மிகப் பேரின்பம் ஒன்றே இயற்கை இன்பமாகும். அதை அனுபவத்தில் மட்டுமே காண இயலும். இந்த நிலையத்தான் ஆமயந் (ஆ என்பது பசு) தீர்த்து இயற்கை இன்ப அனுபவமே மயமாய் என்றார். இந்த அனுபவம் விளங்கும் இடமோ திருச்சிற்றம்பலம்தான். அங்கே விளங்குபவன், அந்தப்பேரின்ப அனுபவமயமாய் விளங்குபவனே அருட்பெருஞ்ஜோதி. தனு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர் அனுபவம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி என்ற அகவல் வரிகளை இங்கு கவனிக்கவும்.

**எங்குறு தீமையும் எனைத் தொடராவகை**

**கங்குலும் பகலும் மெய்க்காவல் செய் துணையே**

இறைவன் அருளானது தீமைகள் எங்கிருந்து எவ்வாறு வந்தாலும் அவை தீங்கு செய்யா வண்ணம் அதை நன்மையாக முடியுமாறு செய்வதே அவனது திரு உள்ளம். அத்துடன் மட்டுமின்றிச் சிறியேனாகிய எனக்கும் அருள்



அமுதமாகிய தெளிவை அளித்தவன் அவனே. மண்ணினில் ஐந்தியல், நீரிடை நான்கியல், தீயிடை மூவியல், காற்றிடை ஈரியல், வெளியினில் ஒன்றே என்று அகவல் எடுத்துக்காட்டுகின்றது. ஸ்பரிசம், மணம், சுவை, தோற்றம், ஓசை என்ற ஐந்தும் மண்ணினில் உண்டு. எனவே மண்ணிடை ஐந்தியல் ஆயிற்று. நீரினில் மணம் இல்லாமல் மற்ற நான்கும் உண்டு. தீயினில் சுவையும் இல்லாமல் மூன்று உண்டு. காற்றினில் தோற்றம் இல்லை. ஸ்பரிசம், ஓசை ஆகிய இரண்டு மட்டும் உண்டு. வெளியாகிய ஆகாயத்தில் ஓசை ஒன்று மட்டுமே உண்டு. இந்தப் பாடலில் ஓசையை ஓமயம் என்றும் ஓமயவான் என்றும் பாடியுள்ளார். தவம் செய்து நாத அனுபவமுடைய வர்களைத்தான் ஓமயவான் வடிவுடையார் என்று வர்ணித்துள்ளார். அத்தகையோர் உள்ளகத்தே நிறைந்த ஒரு பொருளாக இறைவன் விளங்குகின்றான். பரநாத அனுபவ நிலையிலே அண்ட பகிரண்டமே தோற்றறியாத பெருஞ்ஜோதியாகவே ஆண்டவன் தவம் செய்வோர் உள்ளகத்தே தோன்றுவான் என்கிறது அனுபவமாலை. அந்த இறைவன் கருணை உடையவன். பெருங்கருணை உடையவன்.

தோன்றியது மறையும் - பிறந்தது இறக்கும் என்பது அனைவரும் கூறியதும் அறிந்ததும் ஆகும். ஆனால் தவம் செய்வோர் முன் கூறிய அனுபவ நிலையில் பெருஞ்ஜோதி காணுவர். அதே நேரத்தில் அவர்கள் நாவில் அமுதம் சுரக்கும். அந்த அமுதத்தை உண்டவர் மரணம் அடைய மாட்டார்கள். சாகாமல் என்றும் இருப்பர். இதனையே ஒக்க அமுதத்தை உண்டோம் இனிச் சற்றும் விக்கல் வராது கண்டாய் என்று கூறியுள்ளார். உயிருக்கு ஈடாக எந்தப் பொருளும் இருக்க முடியாது. எனவேதான் என்றும் வாழவைக்கும் அவனது கருணையைத் தனிப் பெருங் கருணை என்றும் அதனை உடைய பெரும் பதி அவனே என்றும் வாழ்த்தியுள்ளார். அந்த இறைவனை நாம் அணைந்தால் நாமும், இறவாத நலம்

பெறலாம் இது நல்ல தருணம் வாருங்கள் என்று அழைக்கின்றார். நல்லகுணங்களும், மனம் முதலாகிய கருவிகளும் ஒன்று கூடும் உள்ளகத்தே இறைவன் அணைவான்.

குணமுதற் கருவிகள் கூடிய பகுதியில் அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (அகவல்)

1. நம்முடைய கையானது சலியாது தருமம் செய்ய வேண்டும்

2. அகங்காரம் ஏழவொட்டாது அப்போதே கடிய வேண்டும்

3. அடியார்களை விடாது வளைக்க வேண்டும்

4. மாயையை மனதில் ஒட்டாது கீழே சிந்த வேண்டும் இந்த நான்கையும் செய்வோரை இறைவனே வந்து அணைவானாம் (இங்கித மாலை)

**நீர் பிறரோ யான் உமக்கு நேய உறவலனோ**
**நெடுமொழியே உரைப்பன் அன்றிக்**
**கொடுமொழி சொல்வேனோ**
**சார்புறவே அருளமுதம் தந்தெனை மேல் ஏற்றித்**
**தனித்த பெருஞ் சுகமளித்த தனித்த பெரும்**
**பதிதான்**
**சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்**
**சித்தாடல் புரிகின்ற திருநாள்கள் அடுத்த**
**ஓர்புறவே இது நல்ல தருணம் இங்கேவம்மின்**
**உலகியலீர் உன்னிய வாறுற்றிடுவீர் விரைந்தே**
(7)

இந்த உலகம் முழுவதிலும் தினம் தினம் பல லட்சக்



கணக்கான அளவில் ஆடுகளும், மாடுகளும், கோழிகளும், பன்றிகளும் இன்னும் அனேக உயிர்களும் உணவிற்காகக் கொலை செய்யப்படுகின்றன. இதை யாரும் லட்சியம் செய்வதில்லை. அதைப் பற்றிக் கவலைப்படுவதும் இல்லை. ஆனால் எங்காவது ஒரு மனிதனைக் கொலை செய்தால் கொலை செய்தவனைத் தேடிக் கண்டுபிடித்தச் சட்டம் தண்டிக்கிறது. அதாவது மனித உயிர் மட்டுமே உயர்ந்தது. மற்ற உயிர்களை ஜீவன்களாகவே கருதுவதில்லை. இந்த நிலையை மாற்ற வேண்டும் என்றுதான் திருவருட்பிரகாச வள்ளற் பெருமானார் மனுமுறை கண்ட வாசகம் என்ற நூலை உரை நடையாகப் பள்ளிப் பிள்ளைகட்குத் துணைப் பாடமாக எழுதினார். இந்த நூலை ஏன் எழுதவேண்டும்? வீதி விடங்கன் என்ற அரசகுமாரன் ஓட்டிச் சென்ற தேர்க்காலில் பசுங்கன்று ஒன்று அடிபட்டு இறந்து விட்டது. இதைக் கேள்விப்பட்ட அரசன் என்ன பரிகாரம் செய்யலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருந்தான். மந்திரி கலாவல்லபன் கோதானம் செய்யலாம். வஸ்த்திரதானம் செய்யலாம். ஸ்வர்ணதானம் செய்யலாம் என்றவை போல் பலவிதமான பரிகாரங்களைக் கூறினான். ஆனால் அரசனோ மந்திரி கூறிய எந்தப் பரிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் அந்தப் பசுங்கன்றின் உயிருக்கு ஈடாகத் தன் மகன் வீதி விடங்கனின் உயிரைத்தான் எடுக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தான். அரசனாகிய மனு நீதிச் சோழனுக்குப் பசுங்கன்றின் உயிரும், அரசகுமாரன் உயிரும் சமமாகவே தோன்றியது. இந்தப் பேதமற்ற கருத்தைப் பள்ளிக் குழந்தைகள் மனதிலே தைக்க வேண்டும் என்று வள்ளலார் எண்ணினார். ஈ எறும்பு முதல் யானைவரை அனைத்து உயிர்களும் சமம் என்பதே வள்ளலாரின் தீர்க்கமான முடிவு. வள்ளலார் எல்லா உயிர்களையும் தன் உயிர் போலவே எண்ணினார். தான் அடைந்த சுகம் அனைத்தும் எல்லா உயிர்களும் அடைய வேண்டும் என்று எண்ணினார். தான் அடைந்த சுகத்தினையும் தன் அனுபவத்தையும் நமக்கு அறிவிக்கவே திரு அருட்பாவை

அவர் எழுதினார்.

நீங்கள் அயலாரல்லவே- எனது உறவினர் ஆயிற்றே - நான் உங்களது உறவினன் அல்லவா நான் நல்ல வார்த்தைகளை நீங்கள் நெடுநாள் வாழ்கின்ற வார்த்தைகளைச் சொல்வேனே யன்றிக் கொடிய வார்த்தைகள் சொல்வேனா! இறைவனை எனது எஜமானனாக ஏற்று நான் அவனது அடிமையாகச் செயல்பட்டேன். அவனை எனது தந்தையாக ஏற்று அவனது மகன் என ஊரே அறியும்படி வாழ்ந்தேன். இறைவனை எனது நண்பகனாக ஏற்று அவ்வாறே அவனது தோழனாக மாறினேன். முடிவாக அவனை எனது தலைவனாக ஏற்று, ஒரு நாயகனுக்கு நல்ல துணைவி பணி செய்வது போல் நானும் எனது உடல், பொருள், ஆவி அனைத்தினையும் அவனுக்கே முழுமையாக அர்ப்பணித்து அவனையே சரணடைந்து வாழ்ந்தேன். எவ்வாறெல்லாம் இறைவனைச் சாரவேண்டுமோ அவ்வாறெல்லாம் அவனைச் சார்ந்து வாழ்ந்தேன். அவனது சார்பை நானும் அடைந்ததனால் எனக்கு அருளமுதம் அளித்தான். எனை இதுவரை யாரும் அடைந்திராத மேல் நிலைமேல் ஏற்றினான்.

**ஏறா நிலை மிசை ஏற்றி என்றனக்கே**
**ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி**
**மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்**
**யாவரும் பெற்றிடா இயல் எனக் களித்தனை**
**(அகவல்)**

நான்கு யுகங்கள் சேர்ந்தது ஒரு கற்ப காலம் ஆகும். இப்படிப்பட்ட கற்பங்கள் எவ்வளவு வந்து போனாலும் அழியாத வாழ்வை இறைவன் அளிப்பான். அந்த வாழ்க்கையும் எந்த விதமான துன்பமும் இல்லாத இனிய வாழ்வாகும்.



**கற்பம் பலபல கழியினும் அழிவுறா**
**அற்புதம் தருஞ்சபை அருட்பெருஞ்ஜோதி**
**எனைத்தும் துன்பிலா இயலளித்து எண்ணிய**
**அனைத்தும் தருஞ்சபை அருட்பெருஞ்ஜோதி.**
**(அகவல்)**

எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாத ஒப்பற்றப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தலே ஆன்மலாபம் என்பார் வள்ளற்பெருமானார். இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை அமைந்தால் அதனை எதனுடன் ஒப்பிடுவது? இந்த வாழ்வைத் தான், தனித்த பெருஞ்சுகம் என்றார் இச் சுகத்தை அளித்த ஒப்பற்ற கருணை யாளனான இறைவன் நாம் வாழ வேண்டிய இன்ப வாழ்வுக்குரிய அனைத்தினையும் நாம் பெறவே திருச் சிற்றம்பலமாகிய நமது புருவ மத்தியில் அழகான உருவுடன் சித்தாடல் புரிகின்ற திருநாள்கள் வந்து விட்டன. அவனது திருமேனி என்றவுடன் கை கால்கள் முதலியன ஒரு மனுஷ்யனுக்கு இருப்பதுபோல் வைத்துக் கொண்டு காட்சி அளிப்பானா என்று மயங்கலாம். அவனது திருமேனி தவம் செய்பவர் உள்ளத்துள்ளே பேரொளியாய் அதனுள் தோன்றும் பொன் ஒளியாய் அவ்வொளிக்குள் ஆடும் உள் ஒளியாய் மட்டுமே அவன் காட்சி தருவான். அந்தக் காட்சி காணும்போது சித்துக்கள் அனாயாசமாய்த் தானேவரும்.

இந்த அனுபவங்களைப் பெற இது நல்ல தருணம். ஒன்று சேருங்கள். இங்கே வாருங்கள். உலகியலீர் நீங்கள் விரும்பியவாறு அனைத்தினையும் அடையலாம். விரைந்து அடையலாம். உடனே அடைந்து மகிழலாம். வாருங்கள் என்று அழைக்கிறார்.

விரைந்து விரைந்து அடைந்திடுமின் மேதினியீர் இங்கே
மெய்மை உரைக்கின்றேன்நீர் வேறு நினையாதீர்
திரைந்து திரைந்து உளுத்தவரும் இளமை அடைந்திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய
வரைந்து வரைந்து எல்லாம் செய்வல்ல சித்தன்தானே
வருகின்ற தருணம் இது வரம்பெறலாம் நீவிர்
கரைந்து கரைந்து உளம் உருகிக் கண்களில் நீர் பெருகிக்
கருணை நடக் கடவுளை உட் கருதுமினோ களித்தே (8)

முன் பாடலிலே அந்த இறைவனை நாம் தழுவி இறவாத நலம் பெறலாம் வாருங்கள் என்று உலகிலுள்ள அனைவரையும் அழைத்தார். அவர் அழைத்தால் நாம் உடனே வந்துவிடுவோமா என்ன? குடும்ப பாரம் - நம்பிக்கை இல்லாமை - வழக்கமான தாமச குணம் - பெரியவர்கள் சொல்லை மதிக்காத குணம் - அவர் என்ன சொல்வது நமக்கு எல்லாமே தெரியும் என்ற ஆணவம் இவ்வாறு அனந்தங்கோடி தடைகள் உள்ளனவே. எது எப்படி இருந்தாலும் நாட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. நமக்கும் வயது ஏறிக் கொண்டே வருகின்றது. நாம் சற்று தாமதித்தாலும் மரணம் எனும் பெரும் பாவி வந்திடலாமே - நம் நிலையை நன்குணர்ந்த வள்ளற்பெருமானார் நம்மீது கொண்ட அளவற்ற பெருங்கருணையினாலே விரைந்து விரைந்து வாருங்கள் என்று அழைக்கின்றார். விரைந்து என்ற சொல்லை நமக்குள்ள ஆபத்தையும் அதை நீக்கிக்



கொள்ள வேண்டிய அவசரத்தையும் நமக்கு உணர்த்துவதற்காகவே விரைந்து என்ற சொல்லை இருமுறை கூறியிருக்கிறார். இது மட்டுமல்ல அவர் வார்த்தையை நாம் நம்ப மாட்டோம், என்றும் உணர்ந்த அந்தப் பெருமகனார் நான் உண்மையைத்தான் சொல்கின்றேன் நீங்கள் வேறு மாதிரி நினைக்க வேண்டாம் என்கின்றார்.

நமக்கு வயதாகிவிட்டதே. நரை, திரை, மூப்பு எல்லாம் வந்து விட்டதே. நாம் போய் என்ன பலனை அனுபவிக்கப் போகிறோம் என்ற நமது சந்தேகத்தையும் பெருமானார் அறிவார். திரைந்து திரைந்து உங்கள் உடலானது ஒன்றுக்கும் உதவாது உளுத்துப் போயிருந்தாலும் நீங்கள் மீண்டும் இளமை அடையலாம் என்று உறுதி கூறி நம்மை அழைக்கின்றார். இது மட்டுமல்ல செத்தவர்களே எழுந்து விடுவார்கள். திரைந்து போன உடம்பு உடையோர் இளமை பெறுவது பெரிதல்ல. செத்துப் போனவர்களே எழுந்திடுவர்.

இப்படிப் பட்ட சித்தாடல்களைப் புரிய ஆற்றல் மிக்க இறைவன் வருகின்ற தருணம் நெருங்கிவிட்டது. எல்லாம் வல்ல சித்த இறைவன் ஒருவனே அவனால் ஆகாதது ஒன்றும் இல்லை. அவன் வருகின்ற தருணம் வந்து விட்டது வரம் பெறலாம் நீவிர் என்கிறார். நாம் இதை மிக மிக இலேசாக நினைத்துவிடக் கூடாது. இதிலே ஒரு சூட்சுமம் இருக்கிறது. ஆரம்பத்திலேயே விரைந்து விரைந்து வாருங்கள் என்றாரே அதற்குச் சரியான பொருள் என்ன? இது நல்ல தருணம் அருள் செய்ய என்ற வள்ளலார் பாடலை இங்கே கவனியுங்கள்.

கோபமும் காமமும் குடிகெட்டிப் போயிற்று
கொடிய ஓர் ஆங்காரம் பொடிப்பொடி ஆயிற்று

தாபமும் சோபமும் தான் தானே சென்றது
தத்துவம் எல்லாம் என் தன் வசம் நின்றது.
கரையா எனது மனக் கல்லும் கரைந்தது
கலந்து கொளற்கென் கருத்தும் விரைந்தது
புரையா நிலையில் என் புந்தியும் தங்கிற்று
பொய்படாக் காதல் ததும்பி மேற் பொங்கிற்று

இந்த வரிகளுக்குள்ள பொருளை உணர்ந்து நாம் அவ்வாறு நமது குணங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த நிலைக்கு நம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும். இன்னுமொரு பாடலிலும் வள்ளலாரின் கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

மணம் புரிகடிகை இரண்டரை எனுமோர்
வரையுளது ஆதலால் மகனே
எணம் புரிந்து உழலேல் சவுளம் ஆதிய செய்து
எழில் உறு மங்கலம் புனைந்தே
குணம் புரிந்து எமது மகன் எனும் குறிப்பைக்
கோலத்தால் காட்டுக எனவே
வணம் புரி மணிமா மன்றில் என் தந்தை
வாய் மலர்ந்தருளினர் மகிழ்ந்தே.

திருவருளை மணந்து கொள்ள இரண்டரை நாழிகை எனும் ஒரு நேரமுளது. அதற்குள் உன்னுடைய தீய குணங்களை ஒழித்து நல்ல குணங்களை ஏற்று என் மகன் என்ற குறிப்பை காட்டு என்றார் இறைவன்.

விரைந்து வாருங்கள் என்றது இறை அருளைப் பெறக்கூடிய தகுதியை விரைந்து அடையுங்கள். பக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள். ஜீவகாருண்ய வழி தவறாது



நில்லுங்கள். ஒழுக்கம் அனைத்தினையும் கைவரப்பெற்றுக் கொள்ளுங்கள். சிற்சபை நாட்டமுடன் தவத்தை மேற்கொள்ளுங்கள். மனதை நிறுத்துங்கள் புருவ மத்தியிலே. என்றைய தினம் மனம் அறுபடுகிறதோ அந்த நேரமே உங்களுக்குள் இறைவன் தானே வருகின்ற நேரமாகும். அவனே உங்களைத் தேடிவருவான் மனம் கரைந்து உள்ளம் உருகிக் கண்களில் நீர் பெருக அந்தக் கடவுளை உள்ளே கருதுங்கள். களிப்புடன் கருதுங்கள்.

களித்துலகில் அளவிகந்த காலம் உலகெல்லாம்
களிப்படைய அருட்ஜோதிக் கடவுள் வருதருணம்
தெளித்திடும் எத்தருணம் அதோ என்னாதீர் இதுவே
செத்தவரை எழுப்புகின்ற திகழ்தருணம் உலகீர்
ஒளித்துரைக்கின்றேன் அலன் நான் வாய்ப் பறை ஆர்க்கின்றேன்
ஒரு சிறிதும் அச்சமுறேன் உள்ளபடி உணர்ந்தேன்
அளித்திடு சிற்றம் பலத்தென் அப்பன் அருள் பெறவே
ஆசை உண்டேல் வம்மின் இங்கே நேசமுடையயீரே (9)

முந்தைய பாடலில் இறை வருகின்ற தருணம் இது உலகியலீர் விரைந்து விரைந்து வாருங்கள். அருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறி அழைத்தார். நம் மக்களுக்கும் சந்தேகம் இறைவன் வருவது எந்தத் தருணமோ என்று இந்தப் பாடலில் அவர்கள் சந்தேகத்தைப் போக்குகின்றார். இறைவன் வருதருணம் எத்தருணமோ என்று எண்ணாதீர். அது நிகழ்ந்து கொண்டிருக்கும்

இத்தருணமே. இதுவே செத்தவரை எழுப்புகின்ற தருணமும் ஆகும் என்கிறார்.

செத்தாரை எழுப்புவது என்பது உடம்பை விட்டு உயிர்பிரிந்து உண்மையிலேயே இறந்து போனவர்களை எழுப்புவது எனின் அது இறைவனின் சித்தாடல் ஆகும். அப்பூதி அடிகளின் இறந்துபோன மூத்த மகனைத் திருநாவுக்கரசரும், இறந்து போய் எரிக்கப்பட்டுச் சாம்பலாய்க் கிடந்த பூம்பாவையைத் திருஞானசம்பந்தரும், முதலையுண்ட பாலகனை ஒன்பது ஆண்டுகள் கழித்துச் சுந்தரமூர்த்தி நாயனாரும் உயிருடன் எழுப்பினர் என்று புராணம் கூறுகிறது. இது உண்மையா பொய்யா எனற ஆராய்ச்சியில் இறங்கவில்லை. செத்தவர் எழுதல் என்றதற்கு ஓர் உதாரணமே. இந்த வார்த்தைகட்குச் சில அறிஞர் பெருமக்கள் வேறு விதமாகவும் பொருள் கொள்கின்றனர். எல்லா மனிதர்களும் முடிவில் மரணத்தைத் தழுவி மாண்டு போகின்றனர். எல்லா மனிதர்களின் முடிவும் மரணத்தில்தான் உள்ளது. எல்லோரும் மரணத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கிறார்கள். யாருமே மரணத்தை, சாவை வென்றவரில்லை. ஒருவர் இறந்துபோனார். அவரது உறவினர்கள் இறந்துபோன அவரைச் சுற்றி உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தனர். இதைப் பார்த்த ஒருவர் கூறினாராம் “செத்த பிணத்தைச் சுற்றிச் சாகும் பிணங்கள் அழுகின்றன என்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களையும் சாவை வெல்லாததால் செத்தவர்கள் எனறே அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மரணபயம் தவிராதே வாழ்வதில் என்ன பயனோ என்று வள்ளற் பெருமானாரும் பாடியுள்ளார். செத்த நாய் போல் திரி என்றும் வள்ளலார் கூறியுள்ளார். செத்த நாயானது யாரையும் எதையும் லட்சியம் செய்யாது. அதையும் யாரும் லட்சியம் செய்யமாட்டார்கள். அதுபோல்



நாம் வாழவேண்டும் என்ற கருத்தில் வள்ளற் பெருமானார் கூறியிருக்கலாம். வாழ்கின்ற மனிதர்களுக்கு மரணத்தைக் காட்டி எச்சரிக்கை செய்து, அந்த மரணத்தைத் தவிர்க்கின்ற வழியைக் காட்டி அவர்களை விழிப்படையச் செய்வதையும் அவர்கள் செத்தவர்கள் இப்போது உண்மையறிந்து எழுந்துவிட்டார்கள். இதுவே செத்தாரை எழுப்புவது என்கின்றனர் (எது உண்மையோ நமது வள்ளற் பெருமானார்தான் நமக்கு அறிவிக்க வேண்டும்)

ஆனந்த மயமான இந்த உலகில் மட்டற்ற நெடுங்காலம் இந்த உலக மக்கள்எல்லாம் ஆனந்தம் அடைந்து இன்பமாகவே வாழும் பொருட்டு எல்லா மதத்தினர்க்கும், எல்லா ஜாதியர்க்கும், எல்லாத் தேசத்தவர்க்கும், மற்றும் அனைவருக்கும் பொதுவாய் விளங்கும் அருட்ஜோதிக் கடவுள் வருகின்ற தருணம் எதுவோ என்று சந்தேகப் படவேண்டாம். அத்தருணம் இதுவே. உயிரோடு செத்தவர்களாய் வாழ்ந்து கொண்டிருப்போரும், உண்மையிலேயே உயிரைவிட்டுச் செத்துப் போனவர்களும் எழுந்து விடுவார்கள். நான் உண்மையை ஒளித்து மாறாக உரைக்க வில்லை. நான் உண்மையிலேயே உண்மையாகச் சொல்கின்றேன். பொய் சொல்லவில்லை.

உலகமே அறியும்படி பறை அடித்துக் கூறுகின்றேன். வாய்ப் பறை ஆர்க்கின்றேன். இதைச் சொல்வதற்கு நான் அஞ்ச மாட்டேன். பயப்படமாட்டேன். உண்மையை அச்சமின்றிச் சொல்கின்றேன் ஏனென்றால் நான் உண்மையை உள்ளபடி உணர்ந்தேன். உணர்ந்தே கூறுகின்றேன்.

முதற்பாடலில் புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியமே சொல்கின்றேன் என்று வள்ளற்பெருமானார் கூறியுள்ளார். ஏன் அவ்வாறு கூறினார்? மரணமிலாப் பெருவாழ்வில் நாம் வாழ்ந்திடலாம் கண்டீர் என்று அவர்

கூறியதை நாம் நம்ப மாட்டோம். அவர் காட்டிய வழியில் நடக்க மாட்டோம் என்று கருதினார். நம் மீது கொண்ட இரக்கத்தினால், அளவற்ற கருணையினால் அவ்வாறு கூறினார்.

தவம் செய்வோர் சிற்றம்பலத்தே (புருவமத்தியில்) இறைவனை ஒளியாகக் காணுவர். அச்சமயத்தே ஆண்டவனின் அற்புத சித்திகள் எல்லாம் இவர்கட்குக் கைகூடும். அவனது அருளை நாம் அடையக் கூடிய இடம் சிற்றம்பலம்தான். கண்டதெல்லாம் அனித்தியமே என்ற பாடலில் கூட திருச்சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின் என்று பாடியுள்ளதை ஊன்றிக் கவனிக்கவேண்டும். இங்கும் எல்லா வாழ்வையும் அளிக்கவல்ல சிறறம்பலத்திலே அப்பனின் அருள் பெறலாம். அந்த அருளை அடையவேண்டும், என்ற ஆசை இருந்தால் வாருங்கள் என்று அழைக்கிறார். யார் தன்னிடம் நேசம் கொள்கிறார்களோ அவர்களை அழைக்கிறார். ஏன் மற்றவர்களை அழைக்கவில்லை என்று வினவலாம். வள்ளலாரை நேசிக்காதவர்கள் அவர் வழி வரமாட்டார்கள். என்னுடைய நட்பு வேண்டுமானால் நன்மார்க்கமாகிய சுத்த சன்மார்க்கத்தில் அசையாமல் நில்லுங்கள் என்கிறார். ஆடேடி பந்து என்ற கீர்த்தனையில். வள்ளலாரிடம் நேசம் கொண்டவர்கள் அவர் வழி வாருங்கள். எல்லா நன்மையும் மட்டுமல்ல இறவா வாழ்வும் பெறலாம். அதேபோல் சுத்த சன்மார்க்கத்தில் உறுதியாக யார் அசையாமல் நிற்கின்றார்களோ அவர்களே எனது நண்பர்களும் ஆவர்.

**ஆசை உண்டேல் வம்மின் இங்கே அருட்ஜோதிப் பெருமான்**
**அம்மையுமாய் அப்பனுமாய் அருளும் அருளாளன்**
**ஏசற நீத்து எனை ஆட்கொண்டு எண்ணிய வாறு அளித்தான்**
**எல்லாம் செய்வல்ல சித்தன் என் உயிரில் கலந்தான்**
**தேசுடைய பொதுவில் அருள் திருநடனம் புரியத்**
**திருவுளங் கொண்டெழுந்தருளும் திருநாள் இங்கிதுவே**
**மோச உரை எனநினைத்து மயங்காதீர் உலகீர்**
**முக்காலத்தினும் அழியா மூர்த்தம் அடைந்திடவே (10)**



முந்தைய பாடலில் சிருச்சிற்றம்பலத்தே இறைவனின் அருள் பெற ஆசை இருந்தால் வாருங்கள் என்று அழைத்தார். மீண்டும் அதே அழைப்பு. இறைவனின் அருள் பெறும் ஆசை இல்லாதவர்கள் எவ்வளவு தான் அழைத்தாலும் வரமாட்டார்கள். ஆசை உள்ளவர்கள் மட்டுமே வருவார்கள். ஆசை இருந்தால் வாருங்கள் இங்கே என்றது சன்மார்க்கத்திற்கு என்பது பொருள். அருட்ஜோதிக் கடவுள் எனக்கு அம்மையுமாய் அப்பனுமாய் அருள் கொடுக்கின்ற அருளாளன். யாரும் என்னைக் குற்றம் சொல்லாதவாறு அதாவது என்மீது பழிச்சொல் கூறாதவாறு என்னை ஆட்கொண்டான். அது மட்டுமல்ல நான் எண்ணியவாறு எல்லாம் அறிந்தான்.

இறைவன் மீது உண்மையான அன்பு செலுத்துவோர் எங்கே இருக்கிறார்களோ அங்கே இறைவன் தானே வந்து விடுவானாம்.

**எங்கே மெய்யன்பர் உளர்**
**அங்கே நலந்தர எழுந்தருளும் வண்மைப் பதம்.**

என்கிறது திருவருட்புகழ்ச்சி.

மெய்யன்பரிடத்தே ஆண்டவன் வந்தது மட்டுமல்ல ஏன் வந்தான். அடுத்த வரி இதோ

**"எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம்**
**அன்றே இரங்கி ஈந்தருளும் வண்மைப் பதம்."**

**மெய்யன்பர்களைத் தேடி இறைவனின் பாதங்கள் தானாகவே அங்கே எழுந்தருளும்.** காரணம் இல்லாமல் வருமா? வந்ததற்கு என்ன காரணம்?

மெய்யன்பர்கள் எதை, எவ்வாறு வேண்டினார்களோ அதை அவ்வாறே அன்றே இரக்கத்துடன் அருளுவதற்காகவே எழுந்தருளியது.

இங்கே வள்ளற்பெருமான் சிறந்த மெய்யன்பராக விளங்கிய காரணத்தால் எல்லாம் வல்ல சித்தனாகிய இறைவன் அவர் எண்ணியவாறே அவருக்கு அளித்தான். வள்ளலாரிடம் வந்த இறைவன் அவர் எண்ணியவாறு அளித்தது மட்டுமல்ல, அவரது உயிரிலும் கலந்துவிட்டான். இதைப் பலப்பல பாக்களில், வள்ளலார் விளம்பியுள்ளார். உதாரணத்திற்கு ஒரு பாடலைக் காண்போம்.

**வானிருக்கும் பிரமர்களும் நாரணரும் பிறரும்**
**மாதவம் பன்னாட்புரிந்து மணி மாடநடுவே**
**தேனிருக்கும் மலரணைமேல் பளிக்கறையினுடே**
**திருவடி சேர்த்தருள்க எனச் செப்பி வருந்திடவும்**
**நானிருக்கும் குடிசையிலே வலிந்து நுழைந்து எனக்கே**
**நல்ல திருஅருளமுதம் நல்கிய நன்றியும் என்**



**ஊனிருக்கும் குடிசையிலும் உவந்து நுழைந்து அடியேன்**
**உள்ளமெனும் சிறு குடிசையுள்ளும் நுழைந்தனையே.**

பிரமர்கள், நாரணர்கள் இன்னும் பலர் இறைவனின் திருவடிக்கு ஏங்கிப் பன்னாள் மாதவம் புரிந்து வருந்தி நிற்க இறைவன் வள்ளலார் இருந்த குடிசைக்கு வந்து அவரது உள்ளத்திலே நுழைந்து குடிகொண்டானாம்.

தான் பெற்ற அனுபவத்தை வள்ளற் பெருமானார் ஏன் கூறினார். தற்பெருமைக்கா? இல்லவே இல்லை.அவர் அனுபவத்தை நாம் அறிந்து அவரைப் போலவே சன்மார்க்க நெறியில் நின்றால் நாமும் அவர் பெற்ற அனுபவத்தைப் பெறலாம் என்ற பெருங்கருணையினால் மட்டுமே தன் அனுபவத்தை வள்ளலார் நாம் அறியச் சொன்னார்.

திருப்பொதுவாகிய சிற்றம்பலத்தே பிரகாசம் பொருந்தியிருக்கும். அந்த இடத்திலே உள் ஒளியின் அசைவாகிய நடனம் புரியத் திருவுளம் கொண்டு இறைவன் எழுந்தருளும் திருநாள் இதுவே என்கிறார்.

இறைவனைக் காணத்தவம் செய்யும் நாட்கள் எல்லாம் நல்ல நாட்களே. அவனை என்று காண்கிறோமோ அந்த நாள் திருநாள் ஆகும்.

**எந்நாள் கருணைத் தனிமுதல் நீ என்பால் இரங்கி அருளுதலோ**
**அந்நாள் இந்நாள் இந்நாள் என்று எண்ணி எண்ணி அலமந்தேன்**
**செந்நாள்களில் ஓர் நன்னாளும் திருநாள் ஆனதிலை ஐயோ**

முந்நாள் என்னை ஆட்கொண்டாய் என்ன நாணம் முடுகுவதே.

முதல் பாடல் தொடங்கி இதுவரை எல்லாப் பாடல்களிலும் நான் உண்மையைக் கூறுகின்றேன் பொய் சொல்லவில்லை என்றெல்லாம் நம்மை உணர்த்தி அவர் வார்த்தைப்படி நடந்து அவன் அருளைப் பெற வேண்டும் என்ற ஆதங்கத்தில் இந்தப் பாடலிலும் என்வார்த்தையை மோச உரை என நினைத்து மயங்காதீர்கள் என்று கூறியுள்ளார். நான் உங்களது உறவினன். நல்ல வார்த்தை கூறுவேனே யல்லாது கொடிய வார்த்தை கூற மாட்டேன் என்று முன்பு கூறிய பெருமானார் இந்தப் பாடலிலும் நம்மைக் கருணையுடன் எச்சரிக்கிறார். என் வார்த்தையை மோச உரை என்று எண்ணி மயங்கவேண்டாம். உலகீர் முக்காலத்தும் அழியா உடம்பைப் பெறலாம். அதை அளிக்கவே இறைவன் வருகிறான் வாருங்கள் என்று அழைக்கிறார்.

அடைந்திடுமின் உலகீர் இங்குஇது தருணம் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதி என்அப்பன்வரு தருணம்
கடைந்த தனித் திருவமுதம் களித்தருத்தி எனக்கே
காணாத காட்சியெலாம் காட்டுகின்ற தருணம்
இடைந்தொரு சார் அலையாதீர் சுகம் எனைப் போல் பெறுவீர்
யான்வேறு நீர் வேறு என்று எண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்த சமயக்குழி நின்று எழுந்து உணர்மின் அழியா



ஒரு நெறியாம் சன்மார்க்கத் திருநெறி பெற்றுவந்தே (11)

எல்லா உயிர்கட்கும் இன்பம் தருவதற்கு எங்கும் நிறைந்து விளங்குகின்ற உண்மைக் கடவுள் ஒருவர்தான் உண்டு என்று அறிகின்ற உண்மையை உணரவில்லை. ஆனால் சைவம், வைணவம், சமணம், பவுத்தம் முதலாகப் பலப்பல பெயர்கொண்டு. பல படவிரிந்த அளவிறந்த சமயங்களிலும், அவ்வச் சமயங்களில் குறித்த சாதனங்களிலும், அச்சமயத் தெய்வங்களிலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வருகின்றீர்கள். அந்தச் சமயங்களும் மதங்களும், மார்க்கங்களும், தெய்வங்களும் வெறும் கற்பனையே என்று யாரும் அறிந்து கொள்ள வில்லை. எல்லாச் சமயங்களும் அதனைச் சார்ந்த மக்களை முடிவில் மரணத்திற்கே அழைத்துச் செல்கின்றன. இதுவே உண்மை.

மரணத்தைத் தவிர்க்கும் ஒரே மார்க்கம் எனது (வள்ளலாரின்) சன்மார்க்கம் ஒன்றே ஆகும்.

திருநெறி என்பது மனிதனைத் தெய்வமாக்கும் பெருநெறி. அந்த நெறியை அடைந்திடுங்கள். மற்றறிவோம் எனச் சிறிது தாழ்ந்திருப்பீர் ஆனால் மரணம் எனும் பெரும் பாவி வந்திடுமே சற்றும் அதை நும்மாலே தடுக்கமுடியாதே என்ற உங்கள் தற்போதைய நிலையை உணர்ந்து சன்மார்க்க சங்கத்தை அடையுங்கள். இந்த மார்க்கம், ஒன்றுதான் இறப்பை ஒழிக்கக் கூடியது. எனவே இந்த மார்க்கத்தை அடையுங்கள். யாருடனும் ஒப்பிடமுடியாத தனிப்பெரும் பதியாகிய இறைவன், (அனைவர்க்கும்) வள்ளற்பெருமானின் தந்தையாகிய அந்த இறைவன் வருகின்ற தருணம் வந்துவிட்டது. திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தார்கள். அதை அருந்திய தேவர்கட்கு மரணம் கிடையாது என்று புராணம் கூறுகின்றது. இது ஒரு கட்டுக்கதையாக இருக்கலாம். ஆனால் இதில் ஓர் உண்மை

இருக்கிறது. அதாவது யார் அமுதம் உண்கின்றார்களோ அவர்கள் மரணம் அடைய மாட்டார்கள் என்பதே அந்த உண்மை. தவம் செய்வோர் பரநாத நிலையில் சிற்றம்பலத்தே பேரொளி காண்பார்கள் என்றும் அவ்வமயம் அங்கே மரணத்தைக் தவிர்க்கக்கூடிய அமுதமும் சுரக்கும் என்றும் வள்ளற் பெருமானார் கூறியுள்ளார். இவ்வாறு உள்ள, ஒப்பிடமுடியாத அமுதத்தை அளித்து யாரும் காணமுடியாத காட்சியையும் காட்டுவிக்க இறைவன் வருகின்ற தருணம் எதுவோ என்று மலைப்பு அடைய வேண்டாம். வேறு எங்கோ சென்று அலையாதீர்கள். நான் அடைந்த சுகத்தினை உலகியலில் நீங்களும் அடையலாம்.

அமுதம் உண்டால் மரணம் வராது என்பதற்கு ஆதாரம்:

ஒக்க அமுதத்தை உண்டோம் இனிச் சற்றும் விக்கல் வராது கண்டீர் (அருட்பா) அனுபவமாலைப் பாடலில் அவர் உண்ட அமுதத்தின் சிறப்பினை மிக மிக அழகாக எடுத்து இயம்புகின்றார்.

கள்ளுண்டாள் எனப் புகன்றார் கனக சபைநடுவே
கண்டதுண்டு சிற்சபையில் உண்டதும் உண்டடி நான்
எள்ளுண்ட பல விடயத்து இறக்கும்கள் அன்றே
என்றும் இறவா நிலையில் இருந்தும் கள் உலகர்
உள்ளுண்டபோது மயக்குற்றிடும் கள் அலவே
உள்ள மயக்கு அனைத்தினையும் ஒழித்திடும்கள் மடவாய்
அள்ளுண்ட பிறரும் எனை அடுத்தடுத்துக் கண்டால்



அறிவுதரும் அவர்க்கும் இங்கே யான் உண்ட கள்ளே (அனுபவ மாலை பாடல் 12)

இவ்வளவு உண்மைகளையும் நான் உண்மையில் அனுபவித்த அனுபவங்களையும் ஏன் சொல்கிறேன் தெரியுமா? நீங்கள் வேறு நான் வேறு என்று நான் எண்ணவில்லை. உங்களை யெல்லாம் நானாகவே எண்ணுகிறேன். அதனால் இரக்கத்தின் காரணமாக உரைத்தேன். சமயக் குழியில் சிக்கிக்கொண்டு மாண்டு போகாதீர்கள். விழித்துக் கொள்ளுங்கள் உங்கள் நிலையை எண்ணிப் பாருங்கள். உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். என்றைக்கும் அழியா வாழ்வைத் தரும் திருநெறியாகிய சன்மார்க்கத்தை அடைந்து என்றும் சிரஞ்சீவியாக வாழ வாருங்கள். தாமதம் செய்யாதீர்கள். என் வார்த்தையை நம்பாது ஏமாந்து போகாதீர்கள். என்னோடு சேருங்கள். உடனே வாருங்கள்.

திருநெறி ஒன்றே அதுதான் சமரச சன்மார்க்கச்
சிவ நெறி என்று உணர்ந்து உலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனை ஆட்கொண்டு அருளமுதம் அளித்து
வல்லப சத்திகளெல்லாம் வழங்கிய ஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங் கொண்டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருந்தருணம் இதுவே
கருநெறி வீழ்ந்துழலாதீர் கலக்கம் அடையாதீர்
கண்மையினால் கருத்து ஒருமித்து உண்மை உரைத்தேனே (12)

சன்மார்க்க நெறியின் சிறப்பினை எடுத்துக் காட்டி அதில் வாரும் என்று உலக மக்களையெல்லாம் வள்ளற்பெருமானார் அழைக்கின்றாரே. அவருக்கென்ன அவ்வளவு அக்கறை என்று ஐயமுறலாம். இந்தச் சந்தேகத்தையும் வள்ளபெருமானார் போக்குகிறார்.

பலப்பல வழிகளைக் காட்டி மக்களையெல்லாம் இறப்பு பிறப்பு என்ற பவ நெறியிலேயே அழுத்தி வைத்து இருக்கும் சமயங்களும் மதங்களும் மட்டுமே இதுவரை பரவியிருந்தது. அதனால் மக்கள் இறந்து இறந்து இருளையே அடைந்தனர். எந்த நெறி செம்மையான நெறி, எந்த நெறியில் நாம் செல்ல வேண்டும் என்று அறிந்து கொள்ளாத அவல நிலையே அதற்குக் காரணம். இந்த அற்பத்தனமான நெறிகளை யெல்லாம் தவிர்த்து அனைத்து மக்களுக்கும் பொது நெறியாக விளங்கும் சுத்த சன்மார்க்கத் தன்நெறியில் மக்களை செலுத்துவாயாக அந்த நெறியில் மட்டுமே மதி மண்டலத்து அமுதம் என்று சொல்லப்படும் புத்தமுதத்தை அருந்தி அவர்கள் இறப்பற்று என்றும் வாழ்வார்கள் என்று இறைவனை வள்ளலாருக்கு ஆணையிட்டான். அவன் ஆணைப்படியே இவற்றையெல்லாம் வள்ளற் பெருமானார் கூறுகின்றார்.

<u>ஆதாரம்:</u>

**பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடும் ஓர்**
**பவநெறி இதுவரை பரவியது இதனால்**
**சென்னெறி அறிந்திலர் இறந்திறந்து உலகோர்**
**செறி இருள் அடைந்தனர் ஆதலின் இனி நீ**
**புன்னெறி தவிர்த்து ஒரு பொது நெறி எனும்வான்**
**புத்தமுதருள்கின்ற சுத்த சன்மார்க்கத்**
**தன்னெறி செலுத்துக என்ற என் அரசே**



**தனி நடராச என் சற்குரு மணியே**
**(சற்குருமணிமாலை பாடல் 12)**

பலப்பல நெறிகளில் திருநெறி என்பது ஒன்றே ஒன்றுதான். அது சமரச சன்மாார்க்கச் சிவநெறி என்று உணர்ந்து உலகீர் அதனில் சேர்ந்திடுங்கள். நான் உங்களை ஏன் அழைக்கிறேன் தெரியுமா? இந்த நெறியில் நான் அனுபவித்த அனுபவத்தைக் கூறுகிறேன். கேளுங்கள்.

இந்த நெறியில் இறைவன் எனை ஆட்கொண்டான் மரணமிலாது வாழவைக்கின்ற அருளமுதம் அளித்தான். நான் மரணத்தை அதனால் வென்று விட்டேன்.

ஆற்றல் மிக்க எல்லாச் சக்திகளையும் எனக்கு அளித்தான். அப்படிப்பட்ட வள்ளல் இந்தச் சன்மார்க்கப் பெருநெறியில் சித்தாடல் புரியத் திருவுளங் கொண்டு அருள் அளிக்கும் பெருங் கருணை வடிவினொடு வருகின்ற தருணம் இதுவே. இந்த நெறிக்கு வந்தால் இறைவன் உங்களையும் ஆட்கொண்டு அருளமுதம் அளித்து வல்லப சக்திகள் அனைத்தினையும் வழங்குவான்.

பவ நெறி என்று சொல்லப்படும் உலகியலின் இறப்பு பிறப்பு என்ற கரு நெறியிலேயே உழன்று கொண்டிருக்கின்றீர்கள். எவ்வாறு நான் கூறிய சன்மார்க்க நெறியை அடைவது என்று கலங்க வேண்டாம். நீங்கள் அனைவரும் எனது உடன் பிறப்புக்கள், சகோதரர்கள் என்று நான் உணர்ந்து அதனால் கருத்து ஒருமித்து உங்கட்கு உண்மையை உரைத்தேன். உண்மைமைய உணர்ந்து சன்மார்க்க நெறிக்கு வாருங்கள்.

**உண்மை உரைக்கின்றேன் இங்கு உவந்து**
**அடைமின் உலகில்**

உரை இதனில் சந்தேகித்து உளறி வழியாதீர்
எண்மையினான் என நினையீர் எல்லாஞ் செய்வல்லான்
என்னுள் அமர்ந்து இசைக்கின்றான் இது கேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்த சிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்து விரைந்து ஏறுமினோ சத்திய வாழ்வளிக்கக்
கண்மை தரும் ஒரு பெருஞ்சீர்க் கடவுள் எனப் புகலும்
கருணை நிதி வருகின்ற தருணம் இதுதானே (13)

எவ்வளவுதான் எடுத்து எடுத்துச் சொன்னாலும் உலகியலில் சிக்குண்டு மாயை வலையில் வீழ்ந்து இந்த வாழ்க்கையே சுகம் எனக் காலத்தைக் கழிக்கும் நாம் வள்ளலாரது வாக்கை, அறிவுரையை நம்ப மாட்டோம் என்று அவர் தீர்க்கமாக அறிவார். வள்ளலாரது பெருங்கருணை நம்மை விடுவதாக இல்லை. அதனால்தான் முதல் பாடல் தொடங்கி எல்லாப் பாடல்களிலும் நான் உண்மையே கூறுகின்றேன், பொய் சொல்லவில்லை என்று விடாது கூறுகின்றார். இந்தப் பாடலிலும் ஆரம்பத்திலேயே உண்மை உரைக்கின்றேன் என்றே தொடங்குகிறார். இங்கே மகிழ்ச்சியுடன் வாருங்கள். மக்களே நான் கூறும் வார்த்தைகள் மீது சந்தேகம் கொண்டு எதையோ உளறி வழியாதீர்கள்.

என்னை மிகவும் சாதாரணமானவனாக, எளிமையானவன் என எண்ணிவிடாதீர்கள், நான் கூறுவதெல்லாம் என்னுடைய வார்த்தைகள் என்று எண்ணாதீர்கள். எல்லாம் செய்வல்ல இறைவன் என்னுள் அமர்ந்து அவன் சொல்லுகின்றான். நான் கூறும் வார்த்தை யெல்லாம் எனது



வார்த்தையல்ல இறைவனது வார்த்தைகளாகும்.

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் தன் வார்த்தை நம்புமினோ நமரங்காள் என்று 19-வது பாடலிலும் கூறுகின்றார் இதே கருத்தை இன்னொரு பாடலிலும் கூறுகின்றார். நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் சொல் வார்த்தையன்றி நான் உரைக்கும் வார்த்தையன்று நாட்டீர் நான் - ஏன் உரைப்பேன் நான் யார் எனக்கென ஓர் ஞான உணர்வேது சிவம் ஊன் நாடி நில்லா உழி

நானாக எதுவும் கூறவில்லை. என்னுள் இறைவன் இருந்து அவன் சொன்னதைத்தான் நான் சொல்லுகின்றேன். என் வார்த்தையைக் கேளுங்கள் என்று நம்மிடையே மன்றாடுகின்றார். ஏன் இவ்வாறெல்லாம் அவர் கூற வேண்டும் என்று நாம் சற்றாவது சிந்தனை செய்ய வேண்டாமா? அவருக்கென்ன தலை எழுத்தா? நாம் எக்கேடுகெட்டால் என்ன என்று அவர் இருக்க வேண்டியது தானே. அது வள்ளலார் இல்லை. நம்மீது பெருங் கருணையினால், நாம் உண்மையை உணர வேண்டும் என்ற பேரவாவினால், எப்பாடுபட்டாவது நாம் மரணத்தை வெல்ல வேண்டும் என்று நம்மீது கொண்ட தீராத காதலினால் இவ்வாறெல்லாம் வருந்தி வருந்திக் கூறுகின்றார். அவர் மார்க்கத்திற்கு நம்மை அழைக்கின்றார்.

நீங்கள் உங்களிடமுள்ள காமம் குரோதம் முதலிய வெம்மைகளை விட்டுவிட்டுச் சாந்த சீலர்களாகத் தயவு உள்ளவர்களாக, அமைதியான மனம் படைத்தவர்களாக வாருங்கள். சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து சுத்த சிவ சன்மார்க்க நெறியை விரைந்து பின்பற்றுங்கள். அழிந்து போகும் நிலையை மாற்றிச் சத்திய வாழ்வளிக்க எல்லா நிலைகளிலும் ஆதரவு அளிக்கும் ஒரு கடவுளாகிய அவனிடம் நம்மை வாழ்விக்கும் எல்லாச் சீர்களும் உள்ளன. சீர் என்பது ஒரு தந்தையானவன் திருமணம் ஆகிக் கணவன் வீட்டிற்குச்

செல்லும் தன் மகளுக்கு, அவள் வாழ்வதற்கு வேண்டிய எல்லாப்பொருள்களும் தந்து அனுப்புவான். அதுதான் சீர் எனப்படும். அதுபோல் நமக்குத் தந்தையாக விளங்கும் இறைவன், நாம் இறவாமல் வாழ்வதற்கு என்னென்ன வேண்டுமோ அவற்றையெல்லாம் நமக்குச் சீர்வரிசையென அளிப்பான். அப்படிப்பட்ட கருணையுள்ளவன். பெருங்கருணை உள்ளவன். அவனிடம் உள்ள நிதி கருணைநிதி அவன் வருகின்ற நேரம் இதுவே. எனவே உடனே சன்மார்க்கத்திற்கு வாருங்கள். அவனிடமிருந்து சீர் பெற்று மரண மிலாப் பெருவாழ்வில் வாழுங்கள். நான் கூறுவதெல்லாம் உண்மை. இதில் உங்கட்கு எந்தவித சந்தேகமும் வேண்டாம். நான் எளியவனல்ல. என்னுள் அமர்ந்துள்ள இறைவன் வார்த்தையைச் சொன்னேன். என்னை நம்பி நான் காட்டும் பாதையில் வாருங்கள்.

**தானே தான் ஆகி எலாம்தானாகி அலனாய்த்**
**தனிப்பதியாய் விளங்கிடும் என் தந்தையை என் தாயை**
**வானே அவ்வான் கருவே வான்கருவின் முதலே**
**வள்ளால் என்று அன்பரெல்லாம் உள்ளா நின்றவனைத்**
**தேனே செம்பாகே என்று இனித்திடும் தெள்ளமுதைச்**
**சிற்சபையில் பெருவாழ்வை சிந்தை செய்மின் உலகீர்**
**ஊனேயும் உடலழியா ழிதொறும் ஓங்கும்**
**உத்தம சித்தியைப் பெறுவீர் சத்தியம் சொன்னேனே** (14)

இறைவனை இயற்கை உண்மை வடிவனன் என்பார் வள்ளற்பெருமானார். இயற்கை என்பது என்றும் மாறாத



ஒன்று. எனவே அவன் அவனாகவே என்றும் இருப்பான். அவன் தனி, அதாவது அவனுக்கு நிகர் எதுவும் கிடையாது. அவ்வாறு தனித்தும் இருப்பான். அவன் எல்லாப் பொருள்களிலும் கலந்தும் இருப்பான். அவன் இல்லாத பொருள் எதுவும் இல்லை. மண்ணினில் மண்ணாய், நீரினுள் நீராய், நெருப்பினுள் நெருப்பாய், காற்றினுள் காற்றாய், வானிடைவானாய் மேலும் உலகத்திலுள்ள அசையும் பொருள் அசையாப் பொருள் அனைத்திலும் கலந்திருப்பான். இதனைச் சுருக்கமாகச் சொன்னால் எல்லாம் அவனே. அதைத்தான் எல்லாம் தானாகி என்றார்.

மண்ணினுள் அவன் இருக்கிறான். ஆனால் மண்தான் தெரிகிறது. அவன் தெரியவில்லை. நமது கண்களுக்கு அதே போல் நீர் மட்டுமே நமக்குத் தெரிகிறது. அதனுள் இருக்கும் அவன் தெரிவதில்லை. இதுபோல் எல்லாப் பொருள்களிலும் அவன் இருந்தும் இல்லாததுபோல் தோன்றுவதால் அவனை அலனாய் என்றார். அல்லாதவன் என்பது பொருள்.

இந்த இறைவன் ஒப்பற்ற பெரும் பதியாய் விளங்குகிறான். அப்படிப்பட்ட அந்த இறைவனை அன்பரெல்லாம் என் தந்தையே எனது தாயே என்று வாழ்த்துகின்றனர். அன்பர்கட்கு அவன் அன்னையும் அப்பனுமாய் விளங்குகிறான்.

அவன் புறக்கண்களுக்குத் தோற்றமில்லாமல் இருப்பதால் அவனை வெளி என்றும் அழைக்கின்றார்கள். வள்ளலார் அன்பர் என்ற வார்த்தைக்குத் தரும் விளக்கம் இதுவே.

“அன்பர் என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதும் என்று அதில் பயில்வோரைக் குறித்தது (ஒழிவில் ஒடுக்கம் உரை)

தவம் செய்வோரே சிவானந்தத்தை அடையப் பயில்வோர் ஆவர். தவம் செய்வோருக்கு வான் என்பது புருவமத்தி. வான்கருவாக இருப்பது உயிர். அதன் முதலாக விளங்குவது ஆன்மா. இந்த அனுபவங்களை யெல்லாம் வழங்குகின்ற வள்ளலாக இறைவன் இருக்கிறான். ஆகவே இறைவனையே வான் என்றும், வான் கருவென்றும், வான் கருவின் முதல் என்றும், வள்ளால் என்றும் அன்பரெல்லாம் போற்றி வாழ்த்த நின்றவனைச் சிந்தனை செய்யுங்கள். அத்துடன் நில்லாது தோனாய், செழும்பாகாய் தவம் செய்வோர் உள்ளகத்தே இனிக்கின்ற இறவா வரம் தரும் தெள்ளமுதைச் சிந்தனை செய்யுங்கள். இந்த அனுபவங்கட்கெல்லாம் இருப்பிடமாக விளங்குவது சிற்சபையே ஆகும். நமக்குப் பெருவாழ்வளிக்கும் சிற்சபையைச் சிந்தனை செய்யுங்கள். இதன் பலன் மாமிசப் பிண்டமாகிய இந்த உடல் அழியாது. ஊழிக்காலம் வரும் போது உலகமெல்லாம் அழிந்து புது யுகம் பிறக்கும். ஆனால் இந்த நிலை பெற்றவர்கள் எத்தனை ஊழி வந்தாலும் மரணமடைய மாட்டார்கள்.

**புலால் உடம்பு அழியாது என்பதற்கு ஆதாரம்:**

**பொத்திய மலப்பிணிப் புழுக் குரம்பைதான்க்**
**சித்தியல் சுத்த சன்மார்க்கச் சேர்ப்பினால்**
**நித்தியமாகியே நிகழும் என்பது**
**சத்தியம் சத்தியம் சகத்துள்ளீர்களே.**

**ஊழிதோறு ஊழி அழியாதென்பதற்கு ஆதாரம்**

**கற்பங்கள் பலப்பல கழியினும் அழியுறா**
**அற்புதம் தரும் சபை அருட்பெருஞ்ஜோதி**

இவ்வாறு ஊழி தோறும் உலவாது ஓங்கும் உத்தம சித்தியைப் பெறுவீர்கள். நான் இப்போதும் பொய் கூறவில்லை. சத்தியமே சொன்னேன். நம்புங்கள் சன்மார்க்கத்திற்கு வாருங்கள் என்று அழைக்கிறார்.



**சத்திய வேதாந்தம் எலாம் சித்தாந்தம் எல்லாம்**
**தனித்தனிமேல் உணர்ந்து உணர்ந்தும் தனை உணர்தற்கரிதாய்**
**நித்திய சிற்சபை நடுவே நிறைந்து நடம் புரியும்**
**நித்த பரிபூரணனைச் சித்த சிகாமணியை**
**அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்**
**ஆவியை என் ஆவியிலே அமர்ந்த தயாநிதியைச்**
**சித்தியெலாம் எனக்களித்த சிவ கதியை உலகீர்**
**சிந்தை செய்து வாழ்த்துமினோ நிந்தையெலாம் தவிர்ந்தே (15)**

இறைவனை எங்கும் எல்லாப் பொருள்களிலும் காணும் வேதாந்திகளும், ஜீவன் வேறு இறைவன் வேறு அவன் எதனிடனும் ஒப்பிடமுடியாது என்று பறை சாற்றும் சித்தாந்திகளும் எவ்வாளவுதான் முயன்றாலும் தனித் தனியே மேலும் மேலும் உணர்ந்தும் உணர்ந்தும் இறைவனை உணர்வதற்கு அரிதாய் தடுமாறுகின்றனர். ஆனால் தவம் செய்வோரின் சிற்சபையிலே என்றென்றும் நிறைந்து நடம் புரிந்து கொண்டிருக்கின்றான் அந்த இறைவன். அவனோ நித்தியமானவன். என்றும் எதனாலும் எவ்விதத்திலும் அழிக்கமுடியாதவன். எங்கும் நிறைந்தவன் மட்டுமல்ல. எல்லாம் உடையவன், அவனிடம் இல்லாதது என்ற ஒன்று இல்லவே இல்லை. அதனால் பரிபூரணனாக அவன் விளங்குகின்றான். அவன் புருவ மத்தியிலே சித்தத்திலே சிகாமணியாய் விளங்கிக் கொண்டிருக்கின்றான்.

அவ்வாறு விளங்கிக்கொண்டிருக்கும் பெரும் பதி என்னுள்ளே இருக்கின்றான். மரணத்தைத் தவிர்க்கும் அருமருந்தாகிய அமுதத்தை அவன் அளித்து அவனே

எனக்குக் கிடைத்தற்கரிதாகிய மருந்தாக இருக்கிறான். என் உயிரிலே கலந்து என் உயிராகவே விளங்குகின்றான். என் உயிரிலே அமர்ந்து அருளைப் பொழிந்து கொண்டிருக்கிறான். அந்தத் தயாநிதி எல்லாச் சித்திகளையும் எனக்களித்தான். நாம் அடைய வேண்டிய சிவகதியாகவும் அவனே விளங்குகின்றான். தன் அனுபவத்தை இறவனுக்கும் தனக்கும் உள்ள சூழ்ந்த உறவை, தொடர்பை, தான் அவனிடமிருந்து பெற்ற சித்திகளை எல்லாம் நமக்கு விளக்குகிறார். ஏன் தெரியுமா? அப்போதாவது நாம் உண்மையை உணர்ந்து இறைவனின் அருமை பெருமைகளை அறிந்து நாமும் பாடுபடுவோம். பலனை அடைவோம் என்ற ஆசையில் நம்மை அழைக்கிறார். அவனைச் சிந்தை செய்யுங்கள். வாழ்த்துங்கள். அதற்குமுன் உங்களுடைய தாழ்ந்த குணங்களை விடுத்து நல்ல குணங்களை அடைந்து வாருங்கள் என்று இந்தப் பாடலிலும் அனைவரையும் அழைக்கிறார்.

நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்த
பெருந்தகையை
நிலையனைத்தும் காட்டி அருள் நிலை
அளித்த குருவை
எந்தையை என்தனித் தாயை என்னிரு
கண்மணியை
என் உயிரை என் உணர்வை என்
அறிவுள் அறிவை
சிந்தையிலே தனித்தினிக்கும் தெள்ளமுதை
அனைத்தும்
செய்யவல்லதனித்தலைமைச் சிவபதியை
உலகீர்



முந்தைமல இருட்டொழிய முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து
முயன்றே (16)

யாரும் தன்னைப் பழிக்காத நிலையிலும், தீய எண்ணங்கள், தீய சொற்கள், தீய செயல்கள் எதுவும் இல்லாத நற்குணங்களே வாய்க்கப்பெற்ற அந்த நல்லவர்களின் நெஞ்சகத்தே இறைவன் கோயில் கொண்டிருக்கின்றான். எவ்வுயிரையும் தன்னுயிர்போல் பார்த்துப் பேதம் எதுவும் இல்லாது வாழ்கின்ற உத்தமர் உள்ளத்தே இறைவன் இருப்பான்.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்
முயிர்போல் எண்ணி
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான்
சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தை
மிக விழைந்ததாலோ.

அனுபவத்தின் எல்லா நிலைகளையும் வள்ளற் பெருமானுக்கு இறைவன் காட்டினான்.

ஏறா நிலை மிசை ஏற்றி என்றனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி
(அகவல்)

இறைவனே வள்ளலாருக்குக் குருவாக இருந்து எல்லா நிலைகளிலும் ஏற்றிவைத்தானாம்

எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்தெலாம்
வல்லான் என எனை வைத்த சற்குருவே
(அகவல்)

முதல் நிலை அடி என்றால் கடைசி நிலை முடியாகும். அடி முடி கண்டால் எல்லா நிலைகளும் கண்டவர் ஆவர். இறைவன் வள்ளற்பெருமானார்க்கு அடிமுடியே காட்டினானாம்

**படிமுடிகடந்தனை பார் இது பார் என**

**அடிமுடி காட்டிய அருட்பெருஞ்ஜோதி (அகவல்)**

நிலையனைத்தும் காட்டி அருள் நிலை அளித்த குருவே என்கிறார்.

அந்த இறைவன் தந்தையாய்த் தாயாய் விளங்கியதைத் தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம் என்று பாடுவார். இறைவனை அவர் எவ்வாறெல்லாம் போற்றுகின்றார். என்னிரு கண்மணியே. என் உயிரே என் உணர்வே என் அறிவுக்கு அறிவாய் இருப்பவனே

**பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும்**
**படிக்கப் பக்க நின்று கேட்டாலும்**
**பரிந்து உள் உணர்ந்தாலும்**
**ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும்**
**இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த**
**சுவைக் கரும்பே என்று பாடுவார்**

அவ்வாறு அவரது சிந்தையிலே தனித்து இனிக்கும் தெள்ளிய அமுதமானவனை, அனைத்தும் செய்ய வல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகவரே நாடுங்கள். உங்களை முந்திக் கொண்டும் நடத்திக் கொண்டும் உங்களை அறியாமை என்ற இருளிலேயே வைத்துக்கொண்டிருக்கும் மும்மலமாகிய (ஆணவம் மாயை கன்மம்) அந்த இருளை ஒழிக்க முயலுங்கள். முயற்சி செய்யுங்கள். விரைவாக முந்துங்கள். உங்கள் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற கரணங்கள் அருளை நாட



வொட்டாது தடுக்கும். அவற்றின் வேகத்தைத் தடை செய்யுங்கள். ஒழியுங்கள் இவற்றைச் செய்தால் உங்கட்கு) என்ன பலன் கிடைக்கும் தெரியுமா. வாழ்வின் எல்லையாகிய முடிபாகிய கேவலமான மரண நடுக்கத்தை ஒழிக்கலாம். அதாவது மரண மற்று வாழலாம். இதை நன்கு உணர்ந்து முயலுங்கள். வெல்லுங்கள்.

**முயன்றுலகில் பயன் அடையா மூட மதம் அனைத்தும்**
**முடுகி அழிந்திடவும் ஒரு மோசமும் இல்லாதே**
**இயன்ற ஒரு சன்மார்க்கம் எங்கு நிலை பெறவும்**
**எம்மிறைவன் எழுந்தருளல் இத தருணம் கண்டீர்**
**துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்**
**தோன்ற எழுகின்றதிது தொடங்கி நிகழ்ந்திடும் நீர்**
**பயின்றறிய விரைந்து வம்மின் படியாத படிப்பைப்**
**படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே (17)**

இதுவரை உலகில் பரவியுள்ள சமயங்களாலும் மதங்களாலும் மக்கள் எந்த நெறியில் செல்ல வேண்டுமோ அந்த நெறியை அறிவிக்க முடியாததால் மக்கள் அனைவரும் பவநெறியில் வீழ்ந்து இறந்து இறந்து செறி இருள் அடைந்தனர் என்கின்றார் சற்குருமணி மாலை 12வது பாடலில். ஒகாள மதங்களை முழுவதும் மாற்றி ஒரு நிலை ஆக்கு என்று இறைவன் உரைத்தானாம். எவ்வாறு ஒரு நலை ஆக்கமுடியும்? சற்று சிந்தனை செய்வோம்.

இந்த உலகைப் படைத்தவன் பிரும்மா என்று இந்து சமயம் கூறுகின்றது. ஆனால் கிறித்துவ சமயமோ இல்லை

இல்லை எங்கள் பரமபிதாதான் இந்த உலகைப் படைத்தார் என்கிறது. இஸ்லாமிய சமயம் அல்லாதான் இந்த உலகைப் படைத்தார். மற்ற எந்தக் கடவுளாலும் ஒரு ஈயைக் கூடப்படைக்க முடியாது என்று கூறுகின்றது மூவரும் தனித்தனியாகப் படைத்திருந்தால் மூன்று உலகங்கள் அல்லவா இருக்க வேண்டும்? இருப்பதோ ஒரே ஓர் உலகம். அப்படியானால் உண்மைதான் என்ன? ஒரு கடவுள் உலகைப் படைத்தார். அவரை இந்து சமயம் பிரும்மா என்றும், கிறிஸ்துவ சமயம் பரமபிதா என்றும், இஸ்லாமிய சமயம் அல்லா என்றும் கூறுகிறது. இந்த மூன்று பெயர்களும் எந்தக் கடவுள் உண்மையில் உலகைப் படைத்தாரோ அவரையே குறிக்கின்றன என்ற உண்மையை உணர்ந்தால் இந்த மூன்று சமயங்களும் ஒன்று சேர்ந்து ஒரே சமயம் ஆக முடியும். இந்த உண்மையை உணராததால் சமயங்கள் தங்கள் தங்கள் தெய்வம்தான் உயர்ந்தது என்று வாதிடுவதுடன் மற்ற சமயங்களைத் தாழ்த்தியும் பேசிவருகின்றன. இந்த நிலையைத்தான் குருடர் யானையைக் கண்ட கதை போல் மத வாதிகள் பேசி வருகின்றனர் என்றார்.

எந்தப் பயனையும் அளிக்காத, மூடத்தனத்தை மட்டும் வளர்க்கின்ற மதங்கள் அனைத்தும் சீக்கிரமாக, உடனே அழிந்து போகுமாறு செய்யவும், எந்த ஒரு ஏமாற்றமும் மோசமும் இல்லாத சன்மார்க்கம் எங்கும் நிலைபெற்று ஓங்கவும் ஆண்டவன் எழுந்தருளும் தருணம் இதுவே. அந்த ஆண்டவன் வந்தவுடன் தூக்கம் கலைந்து எழுந்தவர் போல் இறந்தவர்கள் எல்லாம் மீண்டும் உயிருடன் எழுந்து வாழ்தல் அத்தருணம் தொடங்கி நிகழும். நீங்கள் அனைவரும் சன்மார்க்கத்தைப் பயின்று அதிலுள்ள உண்மைகளையும், பயன்களையும், விளைவுகளையும் அறிந்து கொள்ள வாருங்கள். சற்று தாமதித்தாலும் மரணம் எனும் பெரும் பாவி வந்து தாக்கிவிடும். எனவே விரைந்து வாருங்கள்.



வந்தால் என்ன பெறுவீர்கள் தெரியுமா? இதுவரை நீங்கள் படித்த படிப்பெல்லாம் உலகியல் சம்பந்தமானது. நீங்கள் இதுவரை படித்தறியாத படிப்பெல்லாம் சன்மார்க்கத்திலே படிக்கலாம். இறைவனின் உண்மையையும் நம் வாழ்வின் தற்போதைய நிலையையும், நாம் அடைய வேண்டிய முடிபான நிலையையும் அறிந்து கொள்ளலாம். இதுவரை அடைந்த சுகம் எல்லாம் வீணானவையே ஆகும். உண்மையான, அழியாத சுகத்தைச் சன்மார்க்கத்தில் பெறலாம் விரைந்து வாருங்கள்.

**சுக மறியீர் துன்பம் ஒன்றே துணிந்தறிந்தீர் உலகீர்**
**சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மை அறிந்திலீரே**
**இகம் அறியீர் பரம் அறியீர் என்னேதும் கருத்துஇது**
**என்புரிவீர் மரணம் வரில் எங்குறுவீர் அந்தோ**
**அகம் அறியீர் அனகம் அறிந்து அழியாத ஞான**
**அமுத வடிவம் பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே**
**முகம் அறியார் போலிருந்தீர் என்னை அறியீரோ**
**முத்தரெலாம் போற்றும் அருட்சித்தர் மகன் நானே (18)**

ஒருவர் தனது நண்பனைச் சந்தித்த போது அடேய் நீ எப்படிஇருக்கிறாய் என்று கேட்டார். அந்த நண்பர் சொன்ன பதில் என்ன தெரியுமா? “ஏதோ காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கிறேன். நிம்மதியே இல்லை. சாகலாம் என்றாலும் இன்னும் சாவும் வரவில்லை.” இதுதான் பதில். இந்த உலகில் அனேகர் இவ்வாறுதான் பதில் அளிக்கின்றனர். நான் சுகமாக இருக்கிறேன். எனக்கென்ன குறை என்று யாரேனும் சொல்கின்றார்களா?

அனேகமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏன்? நிறைய பேர் துன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்? மனம் மாயைக்கு அடிமை. அதனால் என்ன செய்தும் மனம் திருப்திப்படுவதில்லை. எனவே துன்பமே மிஞ்சுகிறது. இதைத்தான் சுகமறியீர் துன்பம் ஒன்றே துணிந்தறிந்தீர் என்றார். சூது என்ற சொல்லுக்கு வள்ளற்பெருமானார் ஒரு விளக்கம் தருகின்றார்.

**வேதாகங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்**
**வேதாகமத்தின் விளைவு அறியீர்- சூதாகச்**
**சொன்னவலால் உண்மைவெளி தோன்ற**
**உரைத்தலிலை**
**என்ன பயனோ இவை**

உண்மையை வெளிப்படையாகச் சொல்லாமல் உள்ளே மறைத்துப் பேசுவது சூது என்கிறார். மனிதர்களில் அனேகர் இவ்வாறு உண்மையை மனதிலே வைத்துப் பூட்டி விட்டு வேறு விதமாக வெளியே பேசுகின்றார்கள். உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதே மனிதரின் இயல்பாக அமைந்துவிட்டது. இதைத்தான் சூதறிந்தீர் என்றார். ஒருவர் உண்மையைச் சொன்னால் கூட வேறு ஒருவர் அவர் சொல்வதை மறுத்து வாதம் செய்வார். பிறர் கூறுவதை ஏற்க மனித மனம் மறுக்கிறது. தான் என்ற ஆணவமும் தனக்குத் தெரியும் இவர் என்ன சொல்வது என்ற அகங்காரமும் தலைதூக்கி நிற்பதால் அங்கே வாதம் எழுகிறது. சூதுமட்டுமல்ல வாதும் அறிந்தீர் என்றார். சூது வாது இல்லாத நல்ல பிள்ளை என்று கூறினால் சூதும் வாதும் அறிந்தவர்கள் தீயவர்கள் என்று கூறாமலே விளங்கும். துன்பத்தையே அறிவார்கள். சுகம் அறிய மாட்டார்கள். சூது அறிவார்கள். வாது அறிவார்கள். ஆனால் தூய்மை மட்டும் அறியமாட்டார்கள். தூய்மை என்பது நீரால்



அமையும் உடல் தூய்மை மட்டும் அல்ல. எண்ணம், சொல், செயல் அதாவது மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியே தூய்மை எனப்படுவது. இவ்வாறு யாரேனும் இருக்கிறார்களா? தூய்மை என்பதை யாரும் அறியார் என்கிறார்.

இந்த உலக வாழ்க்கை எவ்வாறு உள்ளது? எவ்வாறு இருக்க வேண்டும்? இந்த வாழ்க்கையின் பயன் என்ன? குறிக்கோள் என்ன? இகலோக வாழ்க்கையைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. ஏதோ பிறந்தவிட்டோம் உயிர் உள்ளவரை வாழ்ந்து தானே தீர வேண்டும். மற்ற ஜீவன்கள் வாழ்வது போலவே மனித வாழ்க்கையும் இகலோக வாழ்க்கை இன்னதென்று தெரியாது போய்க் கொண்டே இருக்கிறது.

சரி இந்த உலகம் எப்படி வந்தது? உயிர்கள் எவ்வாறு தோன்றின? இவற்றிக்கெல்லாம் காரணமான கடவுள் யார்? அவர் எங்கிருக்கிறார்? எவ்வாறு இருக்கிறார்? என்ன செய்து கொண்டு இருக்கிறார் என்பதாவது தெரியுமா. இகலோக வாழ்க்கையைப் பற்றியே சரியாக அறிந்து கொள்ளாத உலகவர், கடவுளைப்பற்றி எவ்வாறு அறிவர்? ஆகக் கடவுளைப் பற்றியும் ஒன்றும் தெரியாது.

இதையெல்லாம் நமக்குச் சுட்டிக் காட்டிய நம்பெருமானார் இவற்றையெல்லாம் நீங்கள் அறியவில்லையே. உங்கள் முடிவுதான் என்ன என்று கேட்கிறார். முடிவு எதைப் பற்றி என்று புரியாத உலகவர்க்கு வள்ளலார் விளக்கம் அளிக்கிறார்.

மரணம் வருமே அது வந்தால் என்ன செய்வீர்கள்? எங்கே போவீர்கள் உலகவரைப் பார்த்து வினா தொடுத்த வள்ளற்பெருமானார் மக்களுக்கு ஒரு உண்மையான

வழியும் காட்டுகிறார். ஆன்மாவை, உள்ளத்தை அறியாத உலகவரே புண்ணியம் இன்ன தென்று தெரிந்து அதன் வழி நின்று என்றும் அழியாத ஞான அமுத வடிவம் பெறலாம். சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின். வேறொன்றை நாடாதீர்.

நான் எவ்வளவு சொல்லியும் என் முகம் அறியாதவர்போல் என்னை உங்கள் உறவினன் என்று அறியாது அயலான் என்று இருக்கின்றீரே. என்னை நீங்கள் சரியாக அறிந்து கொள்ளாமல் உங்கள் காலத்தை வீணில் கழித்துக் கொண்டிருக்கின்றீர்கள். வீட்டுப் பேற்றினை அடைந்த முத்தர்கள் எல்லாம் வாழ்த்துகின்ற அருட் சித்தனாகிய இறைவனின் மகன் நான் என அறிந்து கொள்ளுங்கள்.

**நான் உரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்தன் வார்த்தை**

**நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே**

**வான் உரைத்த மணிமன்றில் நடம்புரி எம்பெருமான்**

**வரவு எதிர்கொண்டு அவன்அருளால் வரங்கள் எலாம்பெறவே**

**தேன் உரைக்கும் உளம் இனிக்க எழுகின்றேன் நீவிர்**

**தெரிந்தடைந்தென் உடன் எழுமின் சித்தி பெறலாகும்**

**ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்**

**யானடையும் சுகத்தினை நீர்தான் அடைதல் குறித்தே (19)**



ஆரம்பத்தில் வள்ளற்பெருமானார் சமயம் சார்ந்தே வாழ்ந்திருக்கிறார். அவர் பாடிய பாடல்கள் ஐந்து திருமுறைகள் வரை சமயம் சார்ந்த பாடல்களே ஆகும். அவர் படிப்படியாக வளர்ந்து முடிவில் சமயம் கடந்த பாக்களைப் பாடியுள்ளார். ஆறாம் திருமுறைப் பாடல்கள் சமயம் கடந்த சுத்த சன்மார்க்கப் பாடல்களே ஆகும். எனவே ஐந்து திருமுறைகளைப் படிக்க வேண்டாம். அவற்றை ஒதுக்கி விடுங்கள். ஆரம்பத்தில் தனக்கு அற்ப அறிவாக இருந்தது என்றும் அதனால்தான் சைவ சமயத்தின் மீது அழுத்தமான பற்று கொண்டிருந்தேன் என்றும் அவரே பேருபதேசத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். ஆறாம் திருமுறைமட்டும் படித்தால் போதும் எனச் சுத்த சன்மார்க்கிகள் என்று தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டுள்ள சிலர் மேடையேறிப் பேசுவது மட்டுமல்ல. அவர்களின் இந்தக் கருத்துக்கள் சிறு சிறு புத்தகங்களாகவும் துண்டுப் பிரசுரங்களாகவும் வெளியிட்டு வருகின்ற காட்சியைப் பார்க்கிறோம். இதன் உண்மை என்ன? சற்று கவனமாக ஆழ்ந்து மேலே படியுங்கள்.

1823 ஆம் ஆண்டு இவ்வுலலகில் தோன்றிய நம் பெருமானார் தமது ஒன்பதாவது வயது தொடங்கி அதாவது 1832ம் ஆண்டு தொடங்கிப் பாக்கள் எழுதி வந்தார். அவரது பாக்களை அச்சிடவேண்டும் என்று அவரது அன்பர்கள் முயற்சி செய்தனர். பத்து ஆண்டுகள் கழிந்தன. நம்பெருமானார் பாக்களை அச்சிட்டு வெளிப்படுத்த அனுமதி அளிக்கவே யில்லை. முடிவாக இறுக்கம் இரத்ன முதலியார் அவர்கள், பாக்களை அச்சிட அனுமதி கிட்டும் வரைதான் ஒருவேளை போஜனம் தான் கொள்வேன் என்று நம் பெருமானார்க்குக் கடிதம் எழுதினார். பசிக் கொடுமையை மக்கள் எவ்வாறு அனுபவிக்கின்றார்கள் என்று அறிந்து அப்பிணியைப் போக்கத் தருமச் சாலை நிறுவிய பெருமானார், இறுக்கம் இரத்ன முதலியாரின் நிபந்தனையைக் கண்டபெருமானாரின் இரக்கமான உள்ளம் பாக்களை

அச்சடிக்க உடனே அனுமதி வழங்கியது. அன்பர்கள் ஒன்று கூடிப்பாக்களை ஒன்று திரட்டி ஆறு திருமுறைகளாகப் பிரித்தனர். நம் பெருமானார் முதல் நான்கு திருமுறைகளை மட்டும் வெளியிடுங்கள் என்றதனால் 1867ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நான்கு திருமுறைகள் வெளிவந்தன. ஐந்தாம் திருமுறைப்பாடல்கள் 1880ம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் வெளியிடப்பட்டது.

1867ம் ஆண்டு, முதன் நான்கு திருமுறைகள் வெளியிடப்பட்ட போது திருவருட்பா வரலாறு என்ற சிறு நூலை பின் இணைப்பாகத் தொ. வேலாயுதனார் வெளியிட்டார். அதில் 45வது செய்யுளில் ஆறாம் திருமுறை, பெருமானாரின் வாக்கின்படி அப்போது வெளியிடப் படவில்லை என்று தெரிவிக்கிறார்.

**“ஆறாவது முறை ஆரியனார் தம் அருளானே**
**வேறோர் சார் சேமுற்றென்று எம் வினைவிளைபாகம்**
**தேறாப் பருவம் தேர்ந்தென்சினோர் உது நிற்க**
**வீறார் மற்றை முறை வெளி வந்தமை உரை செய்வாம்**

(திருவருட்பா வரலாறு செய்யுள் 45)

நான்கு திருமுறைகள் வெளியிட்டது பற்றி

**“வேண்டுவன உபகரிக்கக் கலி நாற்பத்தொன்பது நூற்றறு பான் மேலெட்**
**டாண்டெழுதா எழுத்தேற்றி நான்குமுறை அரசறிய வெளியிட்டியார்க்கும்**
**பூண்டெழுபேர் இன்ப மகிழ்வது பெருகப் பணிபுரியும் பெற்றியானே**
**காண்தகு சீர்த் தேவநாயகன் அருளும் இரத்தினப் பேர்க் காத்திட்டானே**

(திருவருட்பா வரலாறு செய்யுள் 57)



1867ம் ஆண்டு நான்கு திருமுறைகள் வெளியிட்ட போது நிறுத்தி வைக்கப்பட்ட ஆறாம் திருமுறைப் பாடல்களுடன் 1867க்குப் பிறகு எழுதப்பட்ட அனைத்துப் பாடல்களும் ஆறாம் திருமுறை என முதன் முதலில் பொன்னேரி சுந்தரம் பிள்ளை திரட்டித்தர, பூவை கலியாண சுந்தர முதலியார் அவர்களால் பார்வையிடப்பட்டு பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

1867ம் ஆண்டிற்கு முன்னால் பாடப்பட்ட பாக்களில் நிறுத்திவைக்கப்பட்டவையும் 1867க்குப் பின்னர் பாடியவையும் தான் தற்போதைய ஆறாம் திருமுறை இதில் 1867க்கு முன் பாடிய பாக்கள் எவை என்று யார் அறிவர். இவை அனைத்தும் சமயம் கடந்த பாக்கள் என்றால் 1867க்கு முன்பே சமயம் கடந்த பாக்களை வள்ளலார் பாடியுள்ளார் என்பது தெளிவாகிறது.

ஆறாம் திருமுறையை வெளியிடவேண்டாம் என்று ஏன் வள்ளற்பெருமானார் சிந்தித்திருக்க வேண்டும். நமக்குப் பக்குவம் இல்லை என்றார். என்ன பக்குவம் இல்லை? அதைப் படித்தால் மற்ற பாடல்கள் தாழ்மையானவை என்றும் தாம் ஆறாம் திருமுறை படித்து உயர்ந்த அறிவு பெற்றுவிட்டதாகவும் தலைக் கனம் ஏறி மற்ற பாக்களை உதாசீனம் செய்யக் கூடும் என்று வள்ளற்பெருமானார் அழுத்தமாக எண்ணினார். **மக்களின் இந்த அபக்குவ நிலையைத்தான் மக்களுக்குப் பரிபாகம், பக்குவம் இல்லை என்று ஆறாம் திருமுறை வெளியீட்டைத் தடுத்தார். அவர் ஒரு திரிகால ஞானி. முக்காலமும் உணர்ந்தவர். அவர் எண்ணியது போலவே இப்பொழுது நடைபெறுவதைக் கண் கூடாகக் காண்கிறோம். மக்களுக்கு முதலில் பக்தியும்**

ஒழுக்கமும் வர வேண்டும் என்று தான் நான்காம் திருமுறை மட்டும் போதும் என்றார். பக்தியும் ஒழுக்கமும் இல்லை. ஆனால் ஆணவம் மட்டும் வள்ளலாருக்கே அற்ப அறிவு என்று நாகூசாமல் சொல்லக்கூடிய அளவிற்கு வளர்ந்து விட்டது.

திரு அருட்பா முழுவதும் என் வார்த்தையல்ல. எனது அற்ப அறிவினால் எழுதப்பட்டது என்று கூறி அவலம் அடையாதீர்கள். இறைவன் என்னுள் இருந்து அவன் பாடியதுதான் திரு அருட்பாவாகும். நான் உரைக்கும் வார்த்தையெலாம் என் வார்த்தையன்று. நாயகனாகிய என் இறைவனது வார்த்தைதையே யாகும். இதையாவது நம்புங்கள். திருச் சிற்றம்பலமாகிய மணிமன்றிடையே நடம்புரிகின்ற எம்பெருமான் வருகின்ற தருணம் இது. அந்த இறைவனை எதிர்கொண்டு வரவேற்போம். அவன் அருளால் வரங்கள் அனைத்தினையும் பெறலாம், தேன் போல் இனிக்க இனிக்க என் உள்ளம் உரைக்கின்றது. நான் அந்த இறைவனை எதிர்கொண்டு அவன் அருளால் வரங்களெல்லாம் பெற எழுகின்றேன். இந்த உண்மைகளை நீங்கள் அனைவரும் உணர்ந்து என்னுடன் சேர்ந்து வாருங்கள். எல்லாச் சித்திகளும் பெறலாம். இவ்வளவையும் நான் ஏன் கூறுகின்றேன் தெரியுமா. உங்கள் மீது நான் கொண்டுள்ள இரக்கத்தினாலும் கருணையினாலும் தான். இதை நன்றாகக் கண்டு கொள்ளுங்கள். இது மட்டுமல்ல நான் அடைகின்ற சுகமனைத்தும் நீங்களும் அடைய வேண்டும் என்று ஆசையினால் கூறுகின்றேன்.

குறித்துரைக்கின்றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின்
கோணுமனக்குரங்காலே நாணுகின்ற உலகீர்
வெறித்த உம்மால் ஒரு பயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறு நினையாதீர்
பொறித்த மதம் சமயமெல்லாம் பொய் பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம் ஒன்றே பொருள் எனக் கண்டறிமின்
செறித்திடு சிற்சபை நடத்தைத் தெரிந்து துதித்திடுமின்
சித்தியெலாம் இத்தினமே சத்தியம் சேர்ந்திடுமே (20)



நியாயங்களை எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் மக்கள் கேட்பதில்லை. யாருக்கோ சொல்லுகின்றார்கள் என்று அலட்சியமாகவே இருப்பர். இதை நன்கு அறிந்த நம்பெருமானார் நான் உங்களுக்காக, உங்களிடம், உங்களைக் குறித்தே சொல்லுகின்றேன். நான் கூறுவதைக் கேளுங்கள். என்னிடம் வாருங்கள். நேர் வழி காட்டாது மாற்று வழியே காட்டும் உங்களது கோணும் மனக்குரங்காலே என்னிடம் வருவதற்கு வெட்கப்படுகின்ற உலகியலீர் நான் உங்களிடம் எதையோ எதிர்பார்ப்பதாக எண்ணவேண்டாம். உங்களிடம் ஒன்றும் இல்லை என நான் அறிவேன். உங்களால் எனக்கு எந்தப் பயனும் வேண்டியதில்லை. இவ்வாறெல்லாம் பேசுவதால் நான் கூறும் வார்த்தைகளைப் பொய் என்று எண்ணாதீர். நான் கூறுவது அனைத்தும் உண்மை. என் வார்த்தைகளைப் பொய் என்று எண்ணி ஏமாந்து போகாதீர்கள். ஏட்டிலே எழுதிவைத்த மதங்கள் சமயங்கள் எல்லாம் பொய் பொய்யே. அவைகள் உண்மையானவை அல்ல. எல்லாம் கற்பனையாக எழுதப்பட்டவையே ஆகும். அதிலே நம்பிக்கை கொண்டு நுழைந்துவிடாதீர்கள். அதிலே புகுந்தால் அலைந்து அலைந்து அழிந்து போய்விடுவீர்கள். வள்ளற் பெருமானுக்கு இறைவன் ஆதியிலேயே இவையெல்லாம் பொய் என்று உணர்த்தினான்.

அவ்வாறு அவர் உணர்ந்ததை உலகவர்க்கும் அறிவிக்கின்றார்.

**சாதியும் மதமும் சமயமும் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி**

சிவம் ஒன்று தான் நாம் அடைய வேண்டிய பொருள் ஆகும் இந்த உண்மையைக் கண்டு அறிந்து கொள்ளுங்கள். ஓர் ஆசாரியனைக் கொண்டு நெற்றிக் கண்ணைத் திறந்து கொள்ளுங்கள். சிற்சபை நடத்தைத் தெரிந்து அதையே துதியுங்கள். இவ்வாறு நீங்கள் நடந்தால் எல்லாச் சித்திகளும் இன்றைய தினத்திலேயே சத்தியமாக நீங்கள் அடைவீர்கள். சிவம் தவிர நீங்கள் பெறவேண்டியது வேறு ஒன்றுமில்லை. சிற்சபை நடத்தைத் தெரிந்து அதனுடன் பழகுவதே அதற்கு ஒரே வழி. உண்மையை உணர்ந்து பலனை அடையுங்கள்.

**சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரச சன்மார்க்கத்**
**திருநெறியே பெருநெறியாம் சித்தியெலாம் பெறலாம்**
**ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்**
**உலகம் எலாம் கண்டிடும் ஓர் உண்மை அறிந்திரிரே**
**வார்ந்த கடல் உலகறிய மரணம் உண்டே அந்தோ**
**மரணம் என்றால் சடம் எனும் ஓர் திரணமும் சம்மதியா**
**சார்ந்திடும் அம்மரணத்தைத் தடுத்திடலாம் கண்டீர்**



**தனித்திடு சிற்சபை நடத்தைத் தரிசனம் செய்வீரே (21)**

எல்லாச் சித்திகளும் நம்மை அடைந்திடவே ஒன்று படுங்கள். சிறு நெறி சென்று வீணாக அழிந்து போகாதீர்கள். பெரு நெறி எது தெரியுமா? சன்மார்க்கத்திரு நெறியே பெரு நெறி என்றுணர்ந்து இங்கே வந்து சேருங்கள். சித்திகள் அனைத்தினையும் பெற்றுக் கொள்ளலாம். இந்த உண்மையை உணர்ந்து தெளிந்து கொள்ளுங்கள். நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள் தெரியுமா உண்ணுதற்கும் உறங்குவதற்கும் மட்டுமே அறிந்தீர்கள். நாம் செய்வதைத் தான் செய்ததாகத் தன் மீது ஏற்றிய பாடல் ஒன்று திரு அருட்பாவில் காணலாம்.

**தூங்குகின்றதே சுகம் என அறிந்தேன்**
**சோறதே பெரும் பேறது என்றுணர்ந்தேன்**
**ஏங்கு கின்றதே தொழில் எனப் பிடித்தேன்**
**இரக்கின்றோர்களே என்னினும் அவர்பால்**
**வாங்குகின்றதே பொருள் என வலித்தேன்**
**வஞ்ச நெஞ்சினால் பஞ்செனப் பறந்தேன்**
**ஓங்கு கின்றதற்கென் செயக்கடவேன்**
**உடையவா எனை உவந்து கொண்டருளே**

நாம் எவ்வாறு வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம் என்பதைத் தன்மீது வைத்துப் பாடியுள்ளார்.

உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் மட்டும் அறிந்த கொண்ட நீங்கள் உலகமெலாம் காண்கின்ற ஓர் உண்மையை அதாவது இறைவனை அறிந்து கொள்ளவில்லையே. யாராய் இருந்தாலும் என்றாவது ஒரு நாள் மரணம் அடைவதைப் பார்க்கவில்லையா. கடலால்

சூழப்பட்ட இந்த உலகரெல்லாம் அறிந்து கொண்டுள்ள ஓர் உண்மை என்ன தெரியுமா? மரணம் என்ற ஒன்று அனைவருக்கும் உண்டு என்கின்ற உண்மைதான்.

மரணம் என்றால் ஒன்றும் அறியாத ஜடப் பொருளாகிய துரும்பும் கூடச் சம்மதிக்காதே. எந்த ஜீவனாவது மரணமடையச் சம்மதிக்குமா?

என்றாவது மரணம் சம்பவிக்கும். சார்ந்து வரும் அம்மரணத்தைத் தவிர்த்திடலாம் வாருங்கள். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா. ஒப்புயர்வற்ற ஈடு சொல்ல இயலாத சிற்சபை நடத்தை அகக்கண்ணால் காணுங்கள். அன்றைய தினமே மரணம் உங்களை விட்டு ஒழிந்திடும். வாருங்கள் என்னோடு சேருங்கள். சன்மார்க்க சங்கத்தைச் சாருங்கள்.

**ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை**
**நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர்.**
**வாடாதீர் சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர்**
**விரைந்து இங்கு என் மார்க்கமும்ஒன்றாமே.**

**செய்தாலும் தீமை எலாம் பொறுத்தருள்வான் பொதுவில்**
**திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தான் அங்கவனை**
**மெய்தாவ நினைத்திடுக சமரச சன்மார்க்கம்**
**மேவுக என்றுரைக் கின்றேன் மேதினியீர் எனைத்தான்**
**வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக் கொண்டிடுவேன்**



**மனங்கோணேன் மானமெலாம் போனவழிவிடுத்தேன்**
**பொய்தான் ஓர் சிறிதெனினும் புகலேன் சத்தியமே**
**புகல்கின்றேன் நீவிர் எலாம் புனிதமுறும் பொருட்டே (22)**

மக்கள் செய்கின்ற தீமைகளை யெல்லாம் பொறுத்துக் கொள்வதும், அவர்கள் செய்கின்ற குற்றங்களை யெல்லாம் குணமாகக் கொள்வதும் இறைவனின் செயலாகும். எனவே நீங்கள் தீமைகளே செய்தாலும் இறைவன் பொறுத்துக் கொள்வான். அவனோ பெருங்கருணை உடையவன். அவனது கருணைக்கு எல்லையே கிடையாது. அவன் வேறு எங்கும் இல்லை. ஒவ்வொருவருடைய புருவ மத்தியிலும் இருக்கிறான். அவனை உண்மையாக நினையுங்கள்.

உங்களுடைய இந்திரியங்களும், கரணங்களும் ஒன்றுசேர வேறு எந்த நினைவுமின்றி அவனை நினையுங்கள். ஞான சரியை முதற்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி அவனை நினைக்க வேண்டும். அத்துடன் நில்லாது எல்லாச் சமயங்கட்கும் எல்லா மதங்கட்கும் பொதுவாய் விளங்கும் சமரச சன்மார்க்கத்தைச் சாருங்கள் என்று நான் கூறுகின்றேன். மீண்டும் மீண்டும் சொல்வதாலும், உங்களை வற்புறுத்திச் சொல்வதாலும் என் மீது உட்கட்குச் சினம் ஏற்படலாம்.

என்னை நீங்கள் பலவாறு ஏசலாம். கொடிய வார்த்தைகளாலும், தீய சொற்களாலும் என்னைத் திட்டலாம். நீங்கள் என்னை எவ்வளவு வைதாலும் அதனை நான் வாழ்த்துவதாகக் கொள்வேனேயன்றித் துளிக் கூட வருத்தப்படமாட்டேன். என் மானம் எல்லாம் அது போன வழியே போகட்டும் என விட்டு விட்டேன். நான் சிறிதளவு கூடப் பொய் சொல்லமாட்டேன். நான் சொல்வதெல்லாம் சத்தியம்.

சத்தியம் - சத்தியமே எனை நம்புங்கள். என் வார்த்தையை நம்புங்கள். உங்கள் மீது நான் கொண்டுள்ள சகோதர உரிமையாலும், அபிமானத்தாலும் மட்டுமே கூறுகின்றேன். நீங்கள் அனைவரும் புனிதர்களாக ஆக வேண்டும் என்ற ஒன்றுதான் எனது நோக்கம். அதுவே என் குறிக்கோள். தயவு செய்து திருச் சிற்றம்பல இறைவனை நாடுங்கள். சன்மார்க்க சங்கத்தில் சேருங்கள்.

பொருட்டல நும் போகம்எலாம் பொய்யாம் இங்கிதுதான்
புகலுவதென் நாள்தொறும் நம் புந்தியில் கண்டதுவே
மருட்டுலகீர் இருட்டுலகில் மடிவதழகலவே
மரணமிலாப் பெருவாழ்வில் வாழவம்மின் இங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
பொருந்துமின் சிற்சபை அமுதம் அருந்துமின் அன்புடனே
அருட்டிறஞ் சேர்ந்தென்ணியவாறு ஆடுமினோ நம்மை
அடுப்பவரே அன்றி நின்று தடுப்பவர் மற்றிலையே (23)

உலகவர் தம் வாழ்க்கையில் உலக விவகாரங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு உலகியலிலேயே மூழ்கி தம் வாழ் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். பணம் சம்பாதிப்பதும் மனைவி, மக்களுடன் கூடி வாழ்வதுதான் வாழ்க்கை என்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தாம் உலகியலில் அனுபவிக்கும் எல்லாச் சுகங்களும் நிலையானதல்ல



என்பதை அறிந்திருந்தாலும் அதற்கெனவே அலைகின்றார்கள். எந்த உலகியல் சுகமும் உண்மையானதல்ல. பொய்யானதேயாகும். இதை மீண்டும் மீண்டும் சொல்வதானல் என்ன பலன். ஒவ்வொரு முறையும் அனுபவிப்பதுதானே. உலகியல் இன்பங்கள் நிலைத்து நிற்பனவல்ல என்பது யாவரும் எப்போதும் அறிந்ததே. ஒன்றை ஒன்றாக நினைப்பது மருள். பித்தளையைப் பொன்னாகவும், கிளிஞ்சலை வெள்ளியாகவும், கானலை நீராகவும் நினைப்பதே மருள் ஆகும். உண்மையில் சுகமல்லாத ஒன்றைச் சுகமாக நினைத்து வாழ்கின்ற உலகீர் என்று பெருமானார் அழைக்கின்றார். இவ்வாறு தவறாக நினைப்பதை மகாதேவ மாலையில் ஒரு நல்ல உதாரணத்துடன் விளக்குகின்றார்.

“ஒரு நாய்க்குச் சாலையில் காய்ந்து போன எலும்புத்துண்டு ஒன்று கிடைத்தது. அந்த நாய் அந்த எலும்புத் துண்டை வாயால் கவ்வி எடுத்துச் சென்றது. ஓரிடத்தில் நன்றாக இருந்துகொண்டு அந்த எலும்புத்துண்டை நாவினால் சுரண்டிக் கொண்டே இருந்தது. அந்த எலும்புத் துண்டில் ஒன்றுமில்லை. அதன் நாக்கு அந்த எலும்புத் துண்டினால் லேசாகக் கீறல் பட்டு ரத்தம் கசிந்தது. அந்த நாய், இரத்தமானது தனது நாவினிலிருந்து தான் வருகின்றது. அது தனது ரத்தமே என்று உணராமல் அந்த எலும்புத்துண்டிலிருந்துதான் இரத்தம் வருகின்றது என்று தவறாக எண்ணி அந்த எலும்புத்துண்டை மேலும் மேலும் சுரண்டியதாம். அதுபோல் காமத்தினால் வரும் சுகம் உண்மையானதல்ல. நமது சக்திதான் விரயமாகின்றது என்று உணராமல் மேலும் மேலும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இது எவ்வாறு உள்ளது எனில் பசுவை விட்டுவிட்டு எருதினிடம் பால் கறக்கச் செல்லும் அறிவிலி போல் நாம் வாழ்கிறோம் என்று நம் பெருமானார் சுட்டிக் காட்டுகிறார்.

"தீவினை நல்வினை எனும் வன் கயிற்றினால்
இந்த ஜீவர்களை ஆட்டுகின்ற தேவே நான்
ஏவினை நேர் கண் மடவார் மையற் பேயால்
இடருழந்தும் என்னே சலிப்பின்றி
நாவினை என்பால் வருந்திக் கறண்டுகின்ற
நாய்க்கு நகை தோன்ற நின்று நயக்கின்றேன் நான்
ஆவினை விட்டு எருது கறந்திடுவான் செல்லும்
அறிவிலிக்கும் அறிவிலியானேன் நாயினேனே."

இப்படி வாழ்கின்ற உலகியலில் அறிவிழந்த இந்த இருட்டுலகில் நீங்கள் மடிந்து போவது அழகல்லவே.

மரணமிலாப் பெரு வாழ்வில் வாழலாம். இங்கே வாருங்கள். இங்கே என்று நான் கூறியது சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தில் ஆகும். சிவமாகிய பொருள் நம்மிடம் சேரக் கூடிய சுத்த சிவ சன்மார்க்க நிலையிலே பொருந்தி இருங்கள். இதைவிட்டு அப்பாலே நகராதீர்கள். சற்றும் அசையாதீர்கள்.

தவம் செய்யுங்கள். பர நாத நிலையிலே சிற்சபையில் பேரொளி காணுங்கள். மதி மண்டலத்தமுதம் சிற்சபையில் வாயார உண்ணுங்கள். அருளாற்றல் உங்களிடம் சேரும். பெருஞ்சோதிததான் நமக்குள் அருளாக விளங்குகின்றது. அந்த அருளாற்றல் பெற்றால் எண்ணியதை எண்ணியவாறு அடையலாம். சிற்றம்பல நடங்கண்டால் எண்ணியவாறு அடையலாம் என்பதற்கு ஆதாரம்:

"பண்ணிய பூசை நிறைந்தது சிற்றம்பல நடங்கண்டு
எண்ணிய எண்ணம் பலித்தது மெய்யின்பம் எய்தியது ஓர்



தண்ணியல் ஆரமுதுண்டனன் கண்டனன் சாமியை நான்
நண்ணியே புண்ணியம் என் உரைக்கேன் இந்த நானிலத்தே."

இந்த நிலை பெற்றால் உங்களை எல்லோரும் பாராட்டி உங்களுடன் சேருவரேயல்லாது உங்களைத் தடுக்கக் கூடியவர் யாரும் இருக்க மாட்டார்கள்.

மற்றறிவோம் எனச் சிறிது தாழ்த்திருப் பீர் ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும் அதை நும்மாலே தடுக்கமுடியாதே
சமரச சன்மார்க்கச் சங்கத்தவர்கள் அல்லால் அதனை
எற்றி நின்று தடுக்க வல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லை கண்டீர் சத்தியம் ஈதென் மொழி கொண்டுலகீர்
பற்றிய பற்றனைத்தினையும் பற்றற்ற விட்டருளம்
பலப்பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே (24)

சத்துவ குணம், ராட்சஸகுணம், தாமச குணம் என மூன்று குணங்கள் மக்கட்கு உண்டு. தாமச குணம் உடையவர்கள் எதையும் உடனே செய்யமாட்டார்கள். பிறகு பார்த்துக்கொள்ளலாம் - பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நாட்களைக் கடத்தி முடிவாக நஷ்டமடைவார்கள். தசரா பண்டிகையின் முடிவில் மஹிஷாசூரவதம் இதைத் தான் விளக்குகிறது. மஹிஷம் என்பது எருமை. தாமச குணம், இதைச் சம்மாரம் செய்து வெற்றி கொள்வதே விஜய தசமி.

இந்த மனித வாழ்க்கை நிலையற்றது. காற்றடைத்தபை, நீர்மேல் எழுத்து, வானவில்லின் வர்ணஜாலம் என்றெல்லாம்

கூறுவார்கள். இந்த உடம்பு எப்போது விழும் என்று யாராலும் முன் கூட்டியே சொல்ல முடியாது. நில்லா உடம்பை நிலை என்றே நேசிக்கும் பொல்லாத நெஞ்சப் புலையனேன் என்றும் வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த மலக்கூடு என்றும் வள்ளற்பெருமானாரே இந்தஉடம்பின் நில்லாமையைப் பாடியுள்ளார். மரணம் எப்போது வேண்டுமானாலும் வரலாம். எனவே அதனைத் தடுத்துக் கொள்ள வாருங்கள் என்று வள்ளற்பெருமான் அழைத்தார். நான் பொய் கூறவில்லை. புனைந்து கூறவில்லை. சத்தியமாய்ச் சொல்கிறேன். நான் உங்களுடைய உறவினன் பகைவன் என எண்ணி விடாதீர். உங்கள் மீது உள்ள பெருங்கருணையினால் கூறுகின்றேன். நான் பேறு யாருக்கோ சொல்வதாக எண்ணாதீர்கள். நான் உங்களைக் குறித்தே சொல்கின்றேன். விரைந்து வந்து சமரச சன்மார்க்க சங்கத்தைச் சாருங்கள் என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மக்கள் அவசரத்தை உணரவில்லை. பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அவரவர் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களது அலட்சியப் போக்கு நம் பெருமானார்க்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. அவர்கட்கு மீண்டும் அறிவுரை கூறத் தொடங்கினார்.

மக்களே பிறகு பார்த்துக் கொள்ளலாம் அறிந்து கொள்ளலாம் என்று சற்று தாமதம் செய்தாலும் மரணம் எனும் பெரும் பாவி வந்திடுமே. சற்றும் அதை நும்மாலே தடுக்க முடியாதே. சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் மட்டுமே மரணத்தை வெல்லும் உபாயம் அறிந்தவர்கள் அதற்குத் தகுந்த பயிற்சி பெற்றவர்கள். சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் தவிர வேறு யாராலும் இந்த மரணத்தை எதிர்க்கவும் முடியாது. வெல்லவும் முடியாது. நான் சொல்லும் இந்த வார்த்தையும் சத்தியமானது. என்னுடைய வார்த்தைகளை நம்பபுங்கள். ஏற்றுக்கொள்ளுங்கள் உலகியலில் என்னென்ன பற்றுகள் கொண்டுள்ளீர்களோ அனைத்தையும் விட்டு விடுங்கள்.



உலகியல் பற்றுக்கள் அனைத்தினையும் பற்றறவிட்டு அருள் விளங்கும் அம்பலப்பற்றையே பற்றுங்கள். சாதனை செய்யுங்கள் என்றும் இறவா வரம் என்னைப் போல் நீங்களும் பெறுவீர்கள் சத்தியம்.

**இறந்தவரை எடுத்திடும் போது அரற்றுகின்றீர் உலகீர்**
**இறவாத பெருவரம் நீர் ஏன் அடைய மாட்டீர்**
**மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ துமக்கு**
**மறந்தும் இதை நினைக்கில் நல்லோர் மனம் நடுங்கும் கண்டீர்**
**சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணி மூப்பு மரணம்**
**சேராமல் தவிர்த்திடும் காண் தெரிந்து வம்மின் இங்கே**
**பிறந்த பிறப்பு இதில்தானே நித்திய மெய் வாழ்வு**
**பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே**
(25)

இறவா வரம் பெறலாம். மரணத்தைத் தடுத்து விடலாம். என்னோடு சேர்ந்து வாருங்கள். என்பேச்சை நம்புங்கள். நான் உங்கள் உறவவினன். நான் கூறுவது என் வார்த்தை என்று எண்ணாதீர்கள். என்னுள்ளிருந்த இறைவன் இசைக்கிறான். சன்மார்க்க சங்கத்தைச் சாருங்கள். மரணத்தை வெல்லும் வழி வேறெந்த மார்க்கத்திலும் இல்லை. தாமதம் செய்யாதீர்கள். உடனே வாருங்கள் என்று கூவினேன். வராததால் உங்கள் உறவினர் ஒருவர் இறந்து விட்டார். அவர் உடலை மயானத்திற்கு எடுத்திடும் போது அழுது அழுது ஆர்ப்பாட்டம் செய்கின்றீர்கள். நீங்கள் அழுவதைப் பார்க்கச் சகிக்கவில்லை. தலையில் அடித்துக் கொண்டு புரண்டு புரண்டு அழுகின்றீர்கள். நீங்கள் என்ன செய்தாலும் இறந்தவர் எழுந்து வரப்போவதில்லை. இறந்தவரை எடுத்திடும் போது இவ்வாறு

துக்கப்பட்டு அழுகின்றீரே நீங்கள் ஏன் இறவாவரம் பெற முயற்சி செய்ய மாட்டேன் என்கின்றீர்கள்.

நீங்களும் மரணம் என்ற ஒன்றை மறந்து வாழ்கின்றீர்கள். தீராத நோயால் துன்பப்படுகின்றீர்கள். நரை திரை மூப்பு நாளுக்கு நாள் உங்களை நெருங்கி வருகின்றனவே. இவை யெல்லாம் உங்கட்குச் சம்மதம்தானா!

இவைகளை நினைத்த மாத்திரத்தில் நல்லோர் மனம் நடுங்கும். அவர்கள் மனம் இரக்கம் நிறைந்தது. பிணி மூப்பு பயம் துன்பம் மரணம் இவற்றை எண்ணினால் உங்கட்குப் பயம் வருவதே இல்லையா?

எவற்றினும் சிறப்புடைய சன்மார்க்கம் ஒன்றே பிணி. மூப்பு-மரணம் இவை சேராமல் தடுத்துவிடும். நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். என்னுடைய சன்மார்க்கம் ஒன்றே இறப்பொழிக்கும் சன்மார்க்கம். இதை உணர்ந்து இங்கே வாருங்கள். சன்மார்க்க சங்கத்தைச் சாருங்கள். அடுத்த பிறவியில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாதீர்கள். அடுத்த பிறவி மனிதப் பிறவி தான் என்பது உறுதியில்லை.

**நயத்தால் உனது திருஅருளை நண்ணாக் கொடியேன் இந்த**
**நாயுடம்பை உயத்தான் வையேன் - மடித்திடுவேன் மடித்தால் பின்னர்**
**வயத்தால் எந்த உடம்பு வருமோ என்னவருமோ என்கின்ற**
**பயத்தால் ஐயோ இவ்வுடம்பைச் சுமக்கின்றேன் எம் பரஞ்சுடரே.**

இந்த உடம்பு இருக்கும்போதே இந்த உடம்பிலேயே இந்தப் பிறவியிலேயே இறைவனை அடைய வேண்டும். இதுதான்



சன்மார்க்க நெறி. வாருங்கள் அநித்யம் நீங்கி நித்ய மெய்வாழ்வு பெற்றிடலாம் பேரின்பம் அடைந்திடலாம் விரைந்து வாருங்கள்.

**உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே**
**உறவன் அன்றிப் பகைவன் என உன்னா தீர் உலகீர்**
**கற்றவரும் கல்லாரும் அழிந்திடக் காண்கின்றீர்**
**கரணமெலாம் கலங்க வரும் மரணமும் சம்மதமோ**
**சற்றும் இதைச் சம்மதியாது என் மனந்தான் உமது**
**தன் மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்**
**இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடு சேர்ந்திடுமின்**
**என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே (26)**

நீங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இதமான வார்த்தைகளையே நான் கூறுகின்றேன். எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரையும் தம்முயிர் போல எண்ண வேண்டும் அல்லவா. நான் உங்களிடம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக் கொண்டிருக்கிறேன். அதனால் கூறுகின்றேன். நீங்கள் நன்மையடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் மட்டுமே கூறுகின்றேன். நான் உங்களது உறவையே விரும்பும் உறவினன் ஆவேன். என்னை உங்களது பகைவனாக எண்ணி விடாதீர்கள். உலகில் நான் கூறும் உண்மைகளைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். மருத்துவர்கள், பொறியாளர்கள், சட்ட வல்லுநர்கள் போன்று நிறைய படித்தவர்களும் இறந்து போகின்றார்கள். பள்ளிக் கூடமே போகாத ஒன்றுமே படிக்காத பாமரரும் இறந்து போகிறார்கள். இதைக் கண்கூடாகக் காண

கின்றீர்களே. திடீரென்று மரணம், மாரடைப்பு போன்ற நோயால் வந்து விட்டால் பரவாயில்லை. தீராத சில நோய்கள் வந்து துன்புறுத்தும். எந்த அளவுக்கு மருத்துவம் பார்த்தும் பலனிருக்காது. முடிவாக மருத்துவர் இன்னும் சில நாட்களே அந்த நோயாளி இருப்பார் என்று சொல்லிவிடுவார். தான் சீக்கிரமே இறந்து விடப் போகிறோம் என்று அறிந்து கொண்ட நோயாளியின் மனம் என்ன பாடுபடும்? பயம் எப்படி அவனை ஆட்டிப்படைக்கும் இதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். என்ன பேசுவது என்ன செய்வது என்பதெல்லாம் குழம்பிப்போய் அவனுடைய கரணங்கள் கலங்கி நிற்குமே. இவ்வாறு கரணங்கள் கலங்க வரும் மரணம் சம்மதமா? என் மனம் இதைச் சற்றும் ஏற்றுக்கொள்ளாது. இந்த மரணத்தைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்களே. இந்த மரணத்தைத் தடுக்க ஒன்றும் செய்யவில்லையே உங்கள் மனம் என்ன கல்லான மனமா? அல்லது கொடுமையான வன்னை மனமா? எனக்கு உங்கள் மனதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே.

வாருங்கள் அந்த மரணத்தை இன்றே தடுத்துவிடலாம். நிச்சயம் தடுத்து விடலாம். என்னோடு சேர்ந்து வாருங்கள் என் மார்க்கம் என்ன மார்க்கம் தெரியுமா? என் மார்க்கமே இறப்பொழிக்கும் சன்மார்க்கம் ஆகும் எனவே என்னோடு வாருங்கள். நான் உங்கள் உறவினனே யன்றிப் பகைவனல்ல. என் வார்த்தையை முழுமையாக நம்பிவாருங்கள். மரணத்தையே வென்று சுமாக வாழ்வீர்கள்.

**சன்மார்க்க பெருங் குணத்தார் தம்பதியை என்னைத்**
**தாங்கு கின்ற பெரும் பதியைத் தனித்த சபாபதியை**



**நன்மார்க்கத் தெனை நடத்திச் சன்மார்க்க சங்கம்**
**நடுவிருக்க அருளமுதம் நல்கிய நாயகனைப்**
**புன்மார்க்கற் கறிவரிதாம் புண்ணியனை ஞான**
**பூரண மெய்ப்பொருளாகிப் பொருந்திய மாமருந்தை**
**அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்**
**அருட்பெருஞ்ஜோதியை உலகீர் தெருட்கொளச் சார்வீரே (27)**

எல்லாம் வல்ல இறைவனின் உண்மையை அறிந்தவர்கள் சன்மார்க்க சங்கத்தார் மட்டுமே என்பது உண்மையான உண்மை. அவர்களே இறைவனை; தம்முளே கண்டு கலந்து அனுவித்துத் தாமே இறைவனாய் ஆவர். சன்மார்க்கத்தார் அடைய வேண்டிய பேறுகள் நான்கு. 1. ஏமசித்தி, 2. சாகாக் கல்வி, 3. தத்துவ நிக்கிரகம் செய்தல் 4. கடவுள் நிலை யறிந்து அம்மயமாதல். இறைவனின் உண்மையை உணர்ந்து அவனிடம் உண்மையான அன்பு கொண்டு வணங்குவோர் சன்மார்க்க சங்கத்தவர் ஆவர்.

சன்மார்க்க சங்கத்தார் பெருமை என்ன வெனில் அவர்கள் அனைவரும் பெருங்குணம் உடைவர். உலகத்து உயிர் அனைத்தினையும் தான் பெற்ற சேய்போல் எண்ணித் தாய் போல் அரவணைத்து நல்லனவையே உரைப்பர்.

இறைவன் வள்ளலாருக்கு அன்னையும் அப்பனுமாய் விளங்கினான் தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம் என்று வள்ளலார் அவனை வாயார வாழ்த்துகிறார். திரு அருட்பாவை ஒரு முறை படித்தாலே இறைவன் எவ்வாறெல்லாம் வள்ளலாரைத் தாங்கினான் என்று நன்றாக உணரலாம். யோக ஞானம் எதுவும் புரியாமல் நலிந்து போகாதே என்று வள்ளலாரக்கு உபதேசம் செய்தான். பாதி இரவில் எழுப்பி அவருக்கு அருட்ஜோதி அளித்தான். தனது

கையில் இருந்த அருட்செங்கோலையே வள்ளலாரிடம் அளித்து அவரையே ஆட்சி செய்யுமாறு பணித்தான். இவை போதாது என்று அவரிருந்த குடிசையினுள் நுழைந்து அவரது உடம்பிலேயே கலந்து விட்டான். வள்ளலார் வேறு இறைவன் வேறு என்ற நிலையே இல்லாமல் இருவருமே ஒன்றாய் உள்ளனர்.

உள் ஒளியாய் ஒவ்வொருவருடைய சிரசிலும் ஆடிக்கொண்டிருக்கும் ஒப்பற்ற சபாபதி நம்பெருமானாரை நன் மார்க்கத்தில் நடத்தினானாம். வெறிக்கும் சமயக்குழியில் விழவிரைந்தேன் தன்னை விழாதவகை மறிக்கும் ஒரு பேரறிவளித்த வள்ளல் என்று ஒரு பாடலில் இறைவனை வள்ளலார். பாராட்டுகிறார். புத்தர் பெருமானுக்குப் பிறகு சுமார் 2000 ஆண்டுகள் கழிந்து மக்களுக்கென ஒரு சங்கம் கண்டவர் வள்ளலார். வசையிலாத மேல் திசை நோக்கி வந்தேன் என்பார். வள்ளலாரை நன்மார்க்கமாகிய சன்மார்க்கத்திலே நடத்தியது மட்டுமின்றிச் அச் சங்கத்தின் நடுவே வீற்றிருக்குமாறு வைத்தான். இதையே பெருமானாரும் கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிலிருந்து குலாவுகின்றேன் என்று பாடுவார்.

மரணமிலாது வாழ்கின்றவகை அருளமுதத்தை வள்ளற்பெருமானார்க்குத் தாயாக நின்று அளித்தான் **அம்மையைக் கண்டேன் அவள் அருள் கொண்டேன்**

**அமுதமும் உண்டேனடி - அம்மா**

**அமுதமும் உண்டேனடி என்று பாடுவார்.**

இந்த அமுதத்தின் விளைவு என்ன? வேறொரு பாடலில் ஒக்க அமுதம் உண்டோம் இனிச் சற்றும் விக்கல் வராது கண்டாய்'' எனப்பாடுவார்.

வருதாகம் தீர்த்திட வந்த தெள்ளமுதே என்பார். இந்த இறைவனை நன் மார்க்கத் தவரன்றிப் புன்மார்க்கத்தில்



அற்பத்தனமும், ஈனத்தனமும் நிறைந்து உலகவாழ்விலே மூழ்கிக் கிடந்து பிறர்க்கு இன்னா செய்வதையே தனது தொழிலாகக் கொண்ட அற்பர்கள் அறிந்து கொள்ளவே முடியாதவன் அந்த இறைவன். அப்படிப் பட்ட புண்ணியனை எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் பூரணனை அந்த உண்மைப் பெரும் பதியை, மரணத்தையே தவிர்க்க அமுதம் தரும் அந்த மாமருந்தானவனை நீங்கள் சாருங்கள். சன் மார்க்கந் தவிர அல்லாத மார்க்கங்களில் செல்லாதீர்கள். விழிப்புடன் இருந்து அல்லாத வழிகளைத் தவிர்த்து விடுங்கள். சிற்றம்பலத்தே பரநாத நிலையில் மனம் அடங்கிய நிலையில் அண்டபகிரண்டம் தோற்றறியாப் பெருஞ்ஜோதியாய்க் காட்சி அளிக்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை உலகீர் உண்மை நிலை அடையச் சாருங்கள். அழியா வாழ்வு பெறுங்கள்.

**சார் உலக வாதனையைத் தவிர்த்தவர் உள்ளகத்தே**
**சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தம சற்குருவை**
**நேர் உறவே எவராலும் கண்டு கொளற் கரிதாம்**
**நித்திய வான் பொருளை எலாநிலைகளும் தானாகி**
**ஏர் உறவே விளங்குகின்ற இயற்கை உண்மை தன்னை**
**எல்லாம் செய் வல்லபத்தை எனக்களித்த பதியை**
**ஓர் உறவென் றடைந்துலகீர் போற்றி மகிழ்ந்திடுமின்**
**உள்ள மெலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே** (28)

உலக வாதனை நம்மைச் சார் கின்றதோ அல்லது நாம் அதனைச் சார்க்கின்றோமோ எதுவாயினும் நாம் உலக வாதனையில் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை. உலக வாதனை என்பது என்ன? மண்ணாசை,

பெண்ணாசை, பொன்னாசை இந்த மூவாசை மட்டுமின்றிப் புகழாசையும் சேர்த்துக் கொண்டு, காமம், குரோதம், லோபம் மோகம் மதம் மாச்சார்யம் போன்ற தீய குணங்களாலும் (சுயநலம்) தான் மட்டும் நன்றாக வாழ வேண்டும் என்பது போன்றவற்றையும் சேர்த்துக் கொண்டு சம்சாரம் என்ற சாகரத்தில் மூழ்கி அல்லல்பட்டு முடிவாக அழிந்து போவதே உலக வாதனையாகும். இந்த வாதனைகளைத் தவிர்த்தவர் உள்ளகத்தே இறைவன் சத்தியமாய் அமர்ந்தருள்வான். களங்கமில்லாத உள்ளமே இறைவனின் ஆலயமாகும். இந்த உத்தமர்களின் உள்ளத்தினுள்ளே அமர்ந்த அந்த இறைவனை யாராலும் நேரில் காண இயலாது. இறைவன் எவர்க்கும் எதிரில் நேராக நின்று காட்சியளிப்பதில்லை. அவனை அகத்தில் மட்டுமே காண இயலும். புறத்தில் காண இயலாது,. இதனைப்

**பொது உணர் உணரும் போதலால் பிரித்தே**
**அது எனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி** என்பார்.

அந்த இறைவன் ஒருவனே நித்தியமானவன் என்றும் அழியாதவன். நமது கண்ணுக்குத் தோற்றமாகும் அத்தனை பொருட்களும் அநித்தியமானவையும் அழிந்து போகக் கூடியதும் ஆகும். அவன் ஒருவனே நித்திய வான் பொருள்.

எல்லா நிலைகளிலும் விளங்குபவன் இந்த இறைவனே. அதனை நம் பெருமானார் **இக நிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய் அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி** (அகவல்) என்று கூறுவார். அந்த இறைவன் இயற்கை உண்மை வடிவினன். அவனால் அனைவர்க்கும் நன்மை மட்டுமே கிடைக்கும். எல்லோருக்கும் நன்மை தரவே அந்த இறைவன் விளங்குகின்றான். எல்லாம்செய்யக் கூடிய வல்லபத்தை இறைவன் வள்ளற்பெருமானுக்கு அளித்தான்.



**தன்பொருள் அனைத்தையும் தன் அரசாட்சியில்**
**என் பொருள் ஆக்கிய என் தனித்தந்தையே**
**தன் சித்தனைத்தையும் தன் சமுகத்தினில்**
**என் சித்தாக்கிய என் தனித் தந்தையே**
**தன் வசம் ஆக்கிய தத்துவம் அனைத்தையும்**
**என் வசம் ஆக்கிய என் உயிர்த்தந்தையே**
**தன் கையில் பிடித்த தனி அருட்ஜோதியை**
**என் கையில் கொடுத்த என் தனித் தந்தையே**
**(அகவல்)**

**இறைவனிடம் தான் பெற்ற வல்லபம், சத்து, சித்து அனைத்தையும் அகவலில் வள்ளற் பெருமானார் விளக்கியிருக்கிறார்.**

எனக்கு இவ்வளவு செய்த இறைவன் என்னோடு உறவு கொண்டதனால் செய்தான். நீங்களும் அவன் உங்கள் உறவென்று, அவனை அடைந்து போற்றி மகிழ்ந்திடுங்கள். நினைந்து நினைந்து என்று முன்பே கூறியதுபோல உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து உள்ளமெல்லாம் கனிந்து கனிந்து உருகி உருகி அவனை நினையுங்கள். வாழ்த்துங்கள் மரணமிலாப் பெருவாழ்வை அடைய வாருங்கள்.